நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYA POOMI

புதிய பூமி

சுற்று 07 ஜூலை/ஆகஸ்ட் 2000 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 36


## எவர்க்காக இந்த வேள்வி !

எதை வேண்டி எழுகிறது இந்தப் பெரு நெருப்பு ?
எதை வேண்டி நிகழ்கிறது இந்தப் பெரு வேள்வி?
இனமென்று மொழியென்று மதமென்று காற்றடிக்க
வீரியமாய் இங்கு ஒரு தேசத்தின் பேரால்
தொடர்கிறது பகைமைத் தீ

..............................................

இம் மண்ணை வளைத்து ஓமகுண்டம் ஒன்றமைத்து
கனல் மூட்டிப் போய் விட்டார்.

..............................................

இம் மண் எரிகிறது, எம் மனிதர் எரிகின்றார்
எம் மனங்கள் எரியாமல் ஏன் பார்த்து நிற்கின்றோம். ?
எவர்க்காக இவ் வேள்வி, எவர்க்காக இந் நெருப்பு.

*நன்றி - வடலி*

# நாட்டின் எதிர்காலம் எவருடைய கைகளில் ?

கடந்த ஆறு வருடங்களாகக் கூறப்பட்டு வந்த இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் என்பது இறுதியாகச் சவப் பெட்டிக்குள் வைக்கப்படும் நிலையை அடைந்து விட்டது. பொ. ஐ. முன்னணி அரசாங்கம் இனப் பிரச்சினையை மனப்பூர்வமாகவும் நேர்மையாகவும் அணுகித் தீர்வொன்றைக்காண முயற்சிக்க வில்லை. தனது தீர்வுத் திட்ட முன்னெடுப்பிற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் விடுதலைப் புலிகளுமே முட்டுக் கட்டை என்ற பிரசாரத்தை முன்னெடுப்பதிலேயே முழுக் கவனத்தையும் கொண்டிருந்தது. ஆனால் தீர்வு விடயத்தில் அதன் நிலைப்பாடு பேரினவாதம் தான். இதனை அரசாங்கத்தை நியாயப்படுத்துவோர் எத்தனை தரம் தீயணைத்து சத்தியம் செய்தாலும் மறுக்க முடியாது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தை என நாடகம் ஆடி இறுதி நேரத்தில் தனது பேரினவாத நிலையைத் தெளிவு படுத்திக் கொண்டது. இத்தனைக்குப் பிறகும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு குடைபிடிக்கும் தமிழர்கள் இருப்பார்களேயானால் அவர்களை மான, ரோசம் கெட்ட தமிழர் என்றே திட்ட வேண்டும். ஆனால் நேர்மையாகப் பார்த்தால் இன ரோசம் மானம் என்பது உயர் வர்க்கத் தமிழருக்கு இருக்க முடியாது. ஏனெனில் அது ஆழமான வர்க்க பாசமேயாகும். ஆனால் மாற்று அரசியல் சக்தி தேடும் சாதாரண தமிழ் மக்கள் ஐ. தே. கட்சியைத் தமது தெரிவாகக் கொள்ள மாட்டார்கள்.

## அழிவுக்குத் திசை காட்டுவோர் ஆளும் வர்க்கப் பேரினவாதிகளே !

வரலாற்றில் வழமையாக ஆற்றி வந்த கேடுகெட்ட கைங்கரியத்தை பௌத்த மத பீடாதிபதிகளும் தூய பேரின வெறியர்களும் மீண்டும் செய்ய ஆரம்பித்துள்ளனர். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு சிலர் எதிர் பார்த்திருப்பது போன்று புத்தாயிரமாமம் நூற்றாண்டில் ஓரளவுதானும் தீர்வு ஏற்படும் என்னும் நம்பிக்கையை அண்மைய நிகழ்வுகள் தூள் தூளாக உடைத்தெறிந்திருக்கிறது.

அப்படியானால் அடுத்து என்ன நிகழப் போகின்றது. பாராளுமன்றத் தேர்தலுக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கும் சம்பந்தமே இல்லை. ஏனெனில் ஆளும் முதலாளித்துவ நில வுடமை ஏகாதி பத்திய ஆதரவு சக்திகளில் எவரை ஆட்சி பீடத்தில் அமர்த்துவது என்பதே தேர்தலின் நோக்கம். எவர் வந்தாலும் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு இருக்கமாட்டாது. ஒரே வழி யுத்தமாகவே இருக்கப் போகிறது.

அவ்வாறான யுத்தம் நாட்டை எங்கே கொண்டு செல்லும் என்பதையிட்டு பேரினவாதிகளுக்கோ அவர்களின் ஆளும் வர்க்கப் பிரதி நிதிகளுக்கோ அக்கறை கிடையாது. ஆனால் இவ் யுத்தத்தை மேலும் விரிவடைய வைத்து ஒரு புறத்தால் அமெரிக்காவும் மறு புறத்தால் இந்தியாவும் நேரடியாகத் தலையிட க்கூடிய சந்தர்ப்பம் விரைவில் தோன்ற லாம். பிராந்திய மேலாதிக்க வல்லரசு என்ற நிலையில் இந்தியா இலங்கையின் வடக்கு கிழக்கை மட்டுமன்றி முழு

*10 பக்கம் பார்க்க*

# அவலங்கள் அதிகரிக்கும் யாழ்குடாநாடு மாணவன் கொலை ! மாணவி பாலியல் வதை

அண்மையில் யாழ் - இந்துக் கல்லூரி மாணவன் சோ. சஞ்சீவன் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். அதே வேளை வடமராட்சி அல்வாயைச் சேர்ந்த ஒரு மாணவி பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறாள். இக் கொலையும் பாலியல் வல்லுறவும் யாழ் குடா நாட்டிலும் பொதுவாகவே வடக்கு கிழக்கில் தொடரும் அவலச் சம்பவங்களாகியுள்ளன. இந்தக் கொடுமைகளைப் புரிந்து வருவோர் ஆயுதப்படையினராகவே இருந்து வருகின்றனர், யுத்தம் தொடரும் சூழலில் ஆயுதப் படையினர் வெறி கொண்டு கொலைகள் புரிவதும் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் கொள்வதும் தவிர்க்க முடியாது என்ற விதமாகவே ஆளும் தரப்பால் உள்ளார்ந்த நியாயம் கற்பிக்கப்படுகிறது. வெளியே மனித உரிமை ஜனநாயகம் பற்றி பீற்றிக் கொள்கிறார்கள். ஏற்கனவே மாணவர்கள், இளைஞர்கள் பொது மக்கள் என எத்தனை பேரைக் கொன்று குவித்துக் கொண்டார்கள். இதுவரை எழுபதினாயிரம் மக்கள் வடக்கு கிழக்கில் கொல்லப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பெண்கள் மீதான பாலியல் வல்லுறவும் - கொலைகளும் பல நூற்றுக் கணக்கில் இடம் பெற்றுள்ளன. அதில் வெளிவந்து அம்பலமாகியவற்றில் கிருசாந்தி, ரஜனி, கோணேஸ்வரி, கமலிட்டா, சாரதாம்பாள் போன்ற பெண்களின் பெயர்கள் ஆயுதப் படைகளின் மிருக வெறிகொண்ட காடைத் தனத்தைச் சுட்டி நிற்கும் வரலாற்றில் அழிக்க முடியாத அடையாளங்களாகும். குடாநாட்டில் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் யுத்த முற்றுகைக்குள் சிக்கி பயங்கர அவலங்களைச் சந்தித்து வருகின்றனர். உணவு, மருந்து எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் - தேவைகள் இன்றி தவிக்கின்றனர். கல்வி சீரழிந்துள்ளது. ராணுவக் காலடிகளின் கீழ் நசுங்குண்டு கிடக்கும் நிலை காணப்படுகின்றது.

மாணவன் சஞ்சீவன் சுடப்பட்டதன் பின்னணி என்ன? ஏற்கனவேயும் ஒரு மாணவன் சுடப்பட்டிருக்கிறான். முன்பு ராணுவத்தால் கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்குமாறு கோரி குடா நாட்டுப் பாடசாலைகள் அனைத்தையும் மாணவர்கள் பகிஷ்தரித்துப் போராட்டம் நடாத்தி வெற்றி பெற்றனர். அதே போன்று பல்கலைக்கழக மாணவர்களும் யுத்தப் பிரதேசத்திற்குள் அகப்பட்ட மக்களை மீட்கப் போராட்டம் நடாத்தி னார்கள். அதிலே முழு மாணவர்களது ஐக்கியமும் போராட்டமும் வெளிப்பட்டது. இவற்றுக்கு காத்திருந்து பழி தீர்க்கும் படலத்தின ஆரம்பமா? தற்போதைய மாணவன் மீதான சூட்டுக் கொலை என்ற ஒரு கேள்வி மாணவர்கள் - மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. இன்று பாடசாலை மாணவன் நாளை பல்கலைக்கழக மாணவர்களா என்ற அச்சமும் பெற்றோர் மத்தியில் காணப்படுகிறது. இக் கொலைச் சம்பவத்திற்கு நீதி விசாரணை நடாத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு எவ்வித பதிலும் இல்லை. ஆனால் மேற்படி மாணவனுக்கு வேறு பட்டங்கள் சூட்டி விட்டால் கொலைகள் யாவும் நியாயமாகிவிடும் என ஆளும் தரப்பில் நம்பப்படுகின்றது. ஆனால் மக்கள் மன்றத்திலே உண்மைகள் துலக்கமாக இருந்து கொண்டே இருக்கும்.

❖❖❖

## 83 இருண்ட யூலையின் கொடிய நாட்கள்

நாடு முழுவதும் தமிழரை வதைத்தன
கொலைகள் புரிந்து இரத்தம் பருகின
வெலிக்கடைச் சிறையிலும் உயிர்ப்பலி எடுத்தன.
சொத்துக்கள் பலதை சுட்டும் எரித்தன.
அகதிகளாக அனுப்பியும் வைத்தன.
பேரினப் பிசாசுகள் நர்த்தனம் புரிந்தன.
ஒடுக்கு முறையின் உச்சம் தெளிந்தது.
இளைஞர் கைகளில் ஆயுதம் ஏந்தினர்.
தொடரும் போருக்கு தொடக்கமாய் அமைந்தது.
இருண்ட யூலையின் கொடிய நாட்கள்.

# மலையகப் பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனம் புறக்கணிப்பு

### *சிறிபாதாவில் பயிற்சி முடித்தோர் வீதியில்*

மலையத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் 2000 ஆசிரியர்களுக்கு மேல் வெற்றிடங்கள் உள்ளன. இது பற்றி கல்வி அமைச்சுக்கோ அன்றி மாகாணக் கல்வி அமைச்சர்களுக்கோ எவ்வித அக்கறையும் கிடையாது. ஏனெனில் மலையகப் பாடசாலைகளில் பெரும்பாலானவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளாக இருப்பது ஒரு காரணமாகும். அடுத்து அவர்கள் தமிழர்களாக இருப்பது மற்றொரு காரணமாகும். இவ் ஆசிரியர் இன்மையால் சிறு பாடசாலைகள் மூடப்படும் அபாயத்தைக் கொண்டுள்ளன. ஒரு ஆசிரியருடன் இயங்கும் பல பாடசாலைகள் மலையகத்தில் இருப்பது ஆச்சரியமானதல்ல.

அதேவேளை ஆசிரியர் நியமனத்திற்காக தகுதி பெற்ற 189 இளைஞர் யுவதிகள் 1998ம் ஆண்டிலிருந்து நியமனம் வழங்காத நிலையில் விடப்பட்டுள்ளனர். பத்தனை சிறி பாத கல்வியியல் கல்லூரியில் உள்ளக வெளிக்கள ஆசிரியர் பயிற்சியை முடித்து டிப்ளோமா சான்றிதழையும் பெற்றுக் கொண்ட மேற்படி இளைஞர் யுவதிகள் இந்த

*10 பக்கம் பார்க்க*

## ஒரு சாப்பாடு 15 ரூபா

பாராளுமன்றத்தில் அதன் உறுப்பிணர்களின் காலை மதியம் மாலை உணவுக்காக 70 வகையான அறுசுவை உணவுகள் தயாரிக்கப் படுகின்றன. பாராளுமன்ற உணவுச் சாலையில் சகலருக்குமான ஒரு நாள் உணவுச் செலவு 12 லட்சம் ரூபாவாகும். அதேவேளை ஒரு சாப்பாட்டின் விலை 15 ரூபா மட்டுமே. நாட்டு மக்கள் ஒரு நேரம் சாப்பாட்டிற்கே தவிக்க வேண்டியுள்ளது.

## யார் ஆட்சி நடத்துவது ?

பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் 25 போர்களினதும் உத்தியோக பூர்வ இல்லங்களுக்கு முழுமையான குளிரூட்டல் வசதி வழங்க முடிவாகி உள்ளது. இதற்காக பல லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. யார் ஆட்சி நடத்துவது ? யார் ஆளப்படுவோர் ?

## மகிழ்ச்சியும் கவலையும்

ஆனையிறவு வீழ்ச்சிக்குப் பின் ஒருமாத காலத்திற்குள் நவீன ஆயுதங்கள் கொள்வனவு செய்வதற்கு மதுபானம், சிகரட் என்பனவற்றின் விலைகளை அதிகரித்து ரூபா 2400 கோடி திரட்டினோம் என பிரதி நிதி அமைச்சார் ஜி. எல். பீரிஸ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அதேவேளை மதுபான விலை அதிகரிப்பு தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதிப்பானது என பதுளை மாவட்ட எம்.பி. சென்னன் கவலை தெரிவித்துள்ளார்.

## மேலாதிக்கம்.

இலங்கை வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் 450 கோடி இந்திய ரூபாய்களை இலங்கை அரசுக்கு வழங்கினார். இதனை இறால் போட்டுச் சுறாப் பிடிப்பதாக எடுக்கக் கூடாது. சுறாப் போட்டு திமிங்கிலம் பிடிப்பதாகவே அமையும் எனப் புதுடில்லியில் பேச்சு அடிபடுகிறது. மேலாதிக்கம் சும்மா இருக்குமா ?

## புரட்சிப் புயல் வை. கோ.

டெல்கிக்கு தலையும் ஈழத்தமிழருக்கு வாலும் காட்டி வரும் வை. கோ('புரட்சிப் புயல்' 'தமிழகப் புலி') வின் மதிமுக இந்துத்துவ - பார்ப்பனிய வெறிகொண்ட அத்வானியைக் கொலுவேற்றி நடாத்திய மாநாட்டின் பந்தல், அலங்காரம், மின்சாரம், விளம்பரம் என்பனவற்றுக்காக ஒரு கோடி ரூபாய்களைச் செலவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. சமூக சீர்திருத்தத்தில் ஆரம்பித்த திராவிட இயக்கத்தினர் எங்கே வந்து நிற்கிறார்கள்.

▲▲▲

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக இளைஞர் யுவதிகள் தலைநகரில் படும் அவலம் !

இலங்கையிலேயே ஆகக் குறைந்த நாள் சம்பளத்தைப் பெற்று வருபவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் என்பது நிரந்தரமாக இருந்து வரும் நடைமுறையாகும். இத்தகைய சம்பளக் குறைவு, தோட்டங்களில் வேலை வழங்காமை, கொம்பனி நிர்வாகங்களினால் தரக்குறைவாக நடாத்தப்படுதல், கல்வி கற்றும் உயர் கல்விக்கு வசதியின்மை, கற்றகல்விக்கு வேலை இன்மை போன்ற காரணங்களினால் மலையக இளைஞர் யுவதிகள் தலை நகருக்கும் ஏனைய நகரங்களுக்கும் வேலை தேடிச் செல்கின்றார்கள்.

இத்தகையவர்களை தலைநகரிலும் ஏனைய நகரங்களிலும் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்திக் கொள்வதில் கொம்பனிகளும், முதலாளிகளும் சிறு முதலாளிகளும் முன் நிற்கிறார்கள். சாதாரண உணவுச் சாலைகள் முதல் ஏனைய பல்வகைக் கடைகளிலும் மலையக இளைஞர் யுவதிகளே வேலை செய்கின்றனர். சிங்கள முஸ்லீம் உணவு மற்றும் விற்பனை நிலையங்களிலும் அதனையே காணமுடிகின்றது. இதற்கான அடிப்படைக் காரணம் குறைந்த சம்பளம் கூடுதலான வேலை வாங்கல் என்பதேயாகும்.

ஆடைத் தொழிற்சாலைகள், ஏனைய சிறு கைத்தொழில் நிறுவனங்கள் போன்றவற்றில் மலையக இளம் யுவதிகள் குறைந்த வயதில் வேலைக்குச் சேர்க்கப்படுகின்றனர். மலையகத்தின் தூர இடங்களில் இருந்து தரகர்கள், உறவினர்கள் போன்றவர்களால் அழைத்து வரப்பட்டே இவ் வேலைகளில் சேர்க்கப் படுகின்றனர். ஆரம்பத்தில் தற்போதைய தலைநகரின் கவர்ச்சியான சூழலும் தாராளமயம் காட்டும் மாயைகளும் இவர்களுக்கு ஒருவகை ஈர்ப்பை வழங்கவே செய்கின்றது. ஆனால் சில மாதங்கள் சென்றதும் தாங்கள் வாழ்வது வேலை செய்வது நரகத்தில் என்பது புலனாகிக் கொள்கிறது. இருந்தாலும் அதில் இருந்து விடுபட முடியாது இதையும் விட்டால் என்ன செய்வது என்னும் நிலைக்குள் தள்ளப் பட்டு விடுகின்றனர்.

இவர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. குறைந்தது 2000/= ரூபாவும் ஆகக் கூடியது 3000/= ரூபா வரை தான் கிடைக்கிறது. சட்டப்படியான சம்பளவிகிதம், நிரந்தரவேலையின் மூலம் வழங்கப்படவேண்டிய சேமலாபநிதி, வருடாந்த உயர்வுப் படிகள், முறையான லீவுகள் போன்றன கவனிக்கப்படுவதில்லை. இவை பற்றிய விளக்கங்களோ அவற்றைப் பெற வேண்டும் என்னும் முயற்சிகளோ எடுக்கப்படுவதும் இல்லை. காரணம் இவர்கள் மலையகத்தின் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளாக இருப்பதுதான். அதாவது இன, வர்க்க ரீதியில் நோக்கப்படுவதன் காரணமேயாகும்.

இக்குறைந்த சம்பளத்தில் உணவு, தங்குமிடம் உடை, யுவதிகளாயின் அதற்குரிய அணிகலன்கள் போன்றவற்றுக்கே அவர்களது சம்பளம் போதாத நிலை. இந்நிலையில் குடும்பத்திற்கு இவர்களால் எதுவும் அனுப்ப இயலுவதில்லை. இவற்றுக்கும் மேலால் மலையக இளைஞர் யுவதிகள் தமிழர்கள் என்பதால் தலை நகரிலும் ஏனைய நகரங்களிலும் போலீஸ் - ராணுவக் கெடுபிடிகளுக்கு ஆளாகி வருகின்றனர். அவர்களுக்கு அடையாள அட்டை இல்லை என்பதைச் சாட்டாக வைத்து மோசமான வதைகளுக்கு உள்ளாக்கப் படுகின்றனர். வேண்டுமென்றே இவர்கள் தொழில் தருவோரால் பொலீஸ் மூலம் பழி வாங்கப் படுவதும் சர்வசாதாரணமாக இடம் பெறுகின்றன. பொய்க் குற்றச் சாட்டுக்களின் மூலம் விசாரணை இன்றித் தடுப்புக்காவலில் இருந்தும் வருவதைக் காணலாம்.

இவை மட்டுமன்றி மலையக இளைஞர் யுவதிகள் தலைநகரில் இடம்பெறும் கலாச்சாரச் சீரழிவுகளுக்குள்ளும் சிக்கிச் சீரழிந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. சினிமா, பாலியல், சம்பந்தமான நீலப் படங்கள், ஆபாசச் சஞ்சிகைகள் - நூல்கள், போதைவஸ்து போன்றவற்றின் சீரழிவுகளுக்குள்ளும் சிலர் சிக்கி வருவதையும் காணமுடிகின்றது.

இந்நிலையில் தலைநகரிலும் ஏனைய நகரங்களிலும் தொழில் புரியும் மலையக இளைஞர் யுவதிகள் எதிர்நோக்கும் பலமுனை நெருக்கடிகளுக்கு ஒரு மாற்றுப் பரிகாரம் தேவைப்படுகின்றது. அதனை நிறைவு செய்யக் கூடிய ஒரு அமைப்பு தோற்றுவிக்கப்படுவது அவசியம். அத்தகைய அமைப்பு தேர்தல் மற்றும் சிலரது பதவி போன்றவற்றுக்கு அப்பால் பிரச்சினைகளை எதிர் கொள்ளக் கூடியதாக அமையப் பெறல் வேண்டும். இதற்கான முயற்சி அவசியம்.

*பெ. கிருஷ்ணசாமி*
கொழும்பு - 13.

# பத்மநாபா புகழ் பாடப்படுவதேன் ?

திடீரென்று அரசாங்கத்திற்குச் காலஞ் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் பத்மநாபா மீது பக்திப் பெருக்கெடுத்துள்ளது. இந்தப் பக்திக்குப் பல்வேறு நோக்கங்கள் இருக்கலாம். என்றாலும் பிரபாகரனுக்கு மாற்றான ஒரு உத்தமமான தலைவராக அவரைக் காட்டுவதற்கான தேவை அரசாங்கத்திற்கு மிகவும் பெரியதாகவே தெரிகிறது. இந்தப் பத்மநாபா விளம்பரத்தில் முக்கியமான பணி முன்னாளில் தீவிர இடதுசாரியாகவும் இடைக்காலத்தில் வடக்கு -கிழக்கு மாகாண (ஈ.பி.ஆர்.எல்.எவ்) அரசின் ஒரே சிங்கள அமைச்சரும் அடுத்து நீண்டகாலமாக பிரேமதாசவின் அடியாளாகவும் இன்று இந்த அரசாங்கத்தை மெல்ல மெல்ல அண்டி வருபவரும் எல்லாத்தில்லுமுல்லுகட்கும் ஒரு மாக்ஸிய அடிப்படையிலான தத்துவார்த்த விளக்கங்கள் தர வல்லவருமான தயான் ஜயதிலகாவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

அரசாங்கத்தை அண்டிப் பிழைக்கும் தமிழ் இயக்கத் தலைவர்கள் எனப் படுவோரிடையே, குறிப்பாக அன்றுமுதல் இன்றளவிலான ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர்களிடையே ஓரளவு முற்போக்கான, கொள்கைத் தெளிவுடைய நபராக பத்மநாபாவைக் கூறலாம். அவருடைய பெரிய அரசியற் தவறு இந்திய மேலாதிக்கத்திடம் ஈ.பி.ஆர்.எல்.எப்.வின் அரசியலை அடமானம் வைத்தது. இந்திய ஆதரவால் அதிகம் சீரழிந்த இயக்கமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். மாறியதில் அவரது பங்கும் மறுக்க முடியாதது. எனினும் அதன் பிற முக்கியஸ்தகளை விட அவரது பொது வாழ்க்கை பாராட்டத்தக்கது. அவரது மரணத்தின் பின்பு ஈ.பி.ஆர்.எல்.எப். மேலும் சீரழிந்து பிளவுண்டு சிதைந்து இன்று இலங்கை அரசின் தயவிலும் இந்திய ஆணைகட்கும் கட்டுப்பட்டுமே இயங்கி வந்துள்ளது.

இந்தப் பின்னணியிலே இன்றைய பத்மநாபா பக்தியை நாம் பார்த்தால், பத்மநாபாவின் விஸ்வரூபத்தின் நிழலின் கீழ் ஊருகிற சில உருவங்களை நாம் காணலாம். பத்து வருடங்கள் இந்தியாவிலேயே தங்கி அத்தனைகாலமும் இலங்கைக்கே வராத வரத ராஜப்பெருமாள் ஏன் போன வருடம் திடீரென்று திருப்பி அனுப்பப்பட்டார் என்ற கேள்விக்கும் அங்கே பதில் கிடைக்கும்.

பத்மநாபா என்கிற புதிய மகாத்மா வார்ப்பின் உண்மையான வாரிசு என்ற தகுதியைப் பெருமாளுக்கு வழங்க வேண்டிய தேவையை நாம் காணலாம். வாரிசு என்ற அந்தஸ்தை நிறுவ தயான் ஜயதிலகவுடைய ரூபவாஹினி தொலைக்காட்சிக் கச்சேரியில் பக்கவாத்தியம் வாசிக்கப் பெருமாள் அழைக்கப்பட்டதை நாம் கவனியாமல் இருந்திருக்க முடியாது. வாரிசு என்ற தகுதியை ஒரு புறமும் புத்மநாபாவின் மாகாத்மியத்தை மறுபுறமுமாக உயர்த்துவதன் நோக்கம் பற்றி இங்கே மேலும் விளக்க வேண்டுமா ? அரசாங்கப் பிரசாரத்தால் ஏமாறத் தமிழ் மக்கள் அறிவு குறைந்தவர்களா ? என்றாலும் தேர்தல்களை வெல்ல மக்களுடைய ஆதரவை விட அதிகாரிகளது ஆதரவு முக்கியம். எப்படி வென்றார்கள் என்று விளக்க பத்மநாபாவின் செல்வாக்கு என்கிற செல்லுபடியாகக் கூடிய புதிய காரணம் ஒன்றும் தயாராகி வருகிறது. இல்லாமல் வரதரின் புகழை நம்பியா அவர் இங்கு வரவழைக்கப்பட்டார் !

# முனுசாமி முணுமுணுக்கிறார்

கொழும்பிலே உக்காந்துகிட்டு பொளுது போவலின்னு தொழிலாளிங்களோட சம்பளம் போதுமா போதாதான்னு தொரமாரு பேசுவாங்க. அவுங்களுக்கு எப்பவுமே தோட்டதுலே தொழிலாளிக்கு கொடுக்கிற பணம் அதிகமாத் தான் தெரியும்.

ஆனா நம்ப பிச்சைச் சம்பளத்திலே சந்தாக்காசும் புடுங்கிக்கிட்டு குளுகுளு ஆபிசிலே உக்காந்து வூடு வளவுண்ணு வாங்கிச் சம்பாதிச்சு இப்போ எம்.பி. தம்பின்னு இருக்குறாங்களே அவுங்க அப்படிஎல்லாம் பேசலாமா ? சும்மாதான் கேட்கிறேன் அவங்க பேசலாமா சாமி ?

வெலவாசி நூத்துக்கு ஏளுதான் கூடியிருக்கு. சம்பளம் நூத்துக்கு இருவது கூட வாங்கித் தந்தாச்சே. இதுவே அதிகம்னு நம்ம இ.தொ.கா. எம்.பி யோகராஜரு சொல்றாரே. அப்படின்னா கொறச்சித்தந்தா போதுமின்னு மொதலாளிமாருக்கிட்டே போய் சொல்லுவாரான்னு தெரியல்லையே சாமி.

மாவு வெல, எண்ண வெல, பாணு வெல எல்லாமே நம்புட்டு அதிகமாச்சுன்னு தெரியாமலாங்க இவுரு பேசராரு. ரொம்ப அசிங்கமா இருக்கு சாமி ! இவுங்கள எல்லாம் தலைவருமாரா ஏத்துக்கிட்டமே நம்ம புத்தியே....

# நாலும் நடக்கும் உலகிலே

## எஞ்சி நின்ற கால் பங்கு ?

இந்திய அமைதி காக்கும் (தாக்கும் ?) படையை இலங்கையிலிருந்து மீளப்பெற்றது தவறு என்று ஜே. என். தீக்ஷித் (முன்னாள் இந்திய வெளியுறவு செயலார்) கூறியுள்ளார். அவரது கருத்து அது. தன்னுடைய பணியில் முக்காற்பங்கை முடித்து விட்டதாகவும் காற் பகுதியை நிறைவு செய்ய மேலும் ஆறு மாதங்களே போதுமாயிருந்திருக்கும் என்பதாகும். இந்த முக்காற் பங்கு என்ன ? இலங்கைத் தமிழர் பிரச்சனையைத் தர்க்கிற பேரில் இலங்கையின் இறைமைக்கு விரோதமாக இந்திய ஆளும் வர்க்க நலன்களை உறுதி செய்யும் நடவடிக்கைகளா ? தமிழ் மக்களுடைய நலன்களுக்கு விரோதமாகப் பேரினவாத யூ.என்.பி. அரசின் ஆயுதப்படைகளுடன் ஒத்துழைத்ததா ? அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்ததா ? அவர்களைத் தங்கள் மண்ணிலேயே லட்சக் கணக்கில் அகதிகளாக்கியதா ? தங்களுடைய தலையாட்டிப் பொம்மைகளை வடக்குக் - கிழக்கு மாகாணத்தில் அதிகாரத்தில் பாதுகாத்து, தமிழ்-முஸ்லிம் உறவுகளைச் சீரழித்ததா ? எஞ்சிய காற் பகுதி என்ன ? இலங்கையை இந்தியாவின் பூரண கொலனியாக்கும் பணியா ?

## கொலைகளும் கோமாளியும்

தேசிய இனப் பிரச்சனையில் அரசியல் தர்வு இல்லாமையினாலேயே தெற்கில் கொடிய படுகொலைகள் நடப்பதாக விக்கிரமபாகு கருணாரத்தின ஒவ்வொரு கொலைக்குப் பிறகும் சொல்லுவார். அரசியல் தீர்வுக்குத் தடையாக உள்ள ஜே.வி.பியைக் கண்டித்து ஒரு சொல்லும் சொல்ல மாட்டார்.

கொடூரம் மேலும் கொடூரத்துக்கு வழிவகுக்கிறது என்று அவர் சொல்வது உண்மை. அவரது அரசியல் கோமாளித்தனமும் மேலும் அவரது அரசயில் கோமாளித் தனத்துக்கே வழி வகுக்கிறது என்பது உண்மை.

இடதுசாரிகளின் ஒற்றுமை பற்றிப் பேசுகிறார். கொள்கை அடிப்படையிலான இடதுசாரி ஒற்றுமையைக் குலைத்துவிட்டு சந்தர்ப்பவாத ஒற்றுமையையே அவர் கோருவது அவரது அரசியல் விதூஷக்கன் பாத்திரத்திற்கு மிகவும் ஏற்றதே.

## காவியும் மஞ்சள் துண்டும்

இலங்கைக் கொள்கையில் வாஜ்பாய் அரசுக்கும் கருணாநிதிக்கும் இடையே வேறுபாடு இல்லை என அமைச்சர்கள் முரசொலி மாறனும் ஜஸ்வந்த சிங்கும் கூறியதாக 10-06-2000 செய்தித் தாளில் வந்துள்ளது. இக் குறிப்பு அச்சுக்குப் போவதற்குள் கருணாநிதி வாஜ்பாய் அரசின் கொள்கை என்ன வென்று கண்டு பிடித்துவிடுவார் என்று நாங்கள் நம்பலாம்.

பரீட்சை வினாத் தாள்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளையுடை விடைகள் வருகிற மாதிரி கருணாநிதியின் கொள்கை என்ன என்பது பற்றி அறிவதற்கு நூற்றுக்கணக்கான வெவ்வேறு தெரிவுகளைத் தரலாம். அதில் எல்லா விடைகளுமே சரியாக இருக்கும். ஏனென்றால் கருனாநிதி நிச்சயமாக ஒவ்வொன்றையும் எப்போதாவது ஒரு முறையேனும் சொல்லியிருப்பார். அதை விட, தரப்பட்ட எதுவுமே இல்லை என எழுதினாலும் சரியாகவே இருக்கும். ஏனென்றால், கருணாநிதிக்குத் தோளில் கறுப்புச் சால்வைபோக முதலே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றும் போய் பதவி - பணம் - பழிவாங்கல் என்கிற மூன்றுமே அவரது இலட்சியங்களாகிவிட்டன.

## பயங்கரவாத ஒழிப்பு

ஒரு வருடத்திற்குள் பயங்கரவாதத்தை ஒழிக்க ஆளுக்கட்சியும் யூ.என்.பியும் கூட்டாக இயக்கம் தொடக்கியுள்ளார்கள். எனவே இனிமேல் ஆளுக்காள் எதிராக அரசியல் வன்முறை இராது என்று நம்பலாம். பிறகு இரு தரப்பாரும் சேர்ந்து மற்ற எல்லாரையும் நசுக்குவார்கள் 'என்பது வேறு விடயம்.

## கோழி மேய்ச்சலும்

முன்னெல்லாம் கோழி மேய்ச்சாலும் கோரணமேந்தில மேய்க்கோணும் என்பார்கள் அந்தக் காலம் மலையேறிவிட்டது. இப்போது கோழி மேய்ச்சாலும் நொண் கோரணமேந்தில மேய்க்கோணும் என்று சிலர் சொல்லிக் கொள்கிறார்கள். நம் என். ஜி. ஓக்களின் சொகுசு வாழ்க்கையை நோக்கும் போது அது மிகவும் சரி போலவே தெரிகிறது.

## இலக்கிய மறதிகள்

இலங்கை வானொலியில் சிறு சஞ்சிகைகள் தொடர்பான கருத்தாடல் ஒன்று ஜூன் மாதம் நடைபெற்றது. இத் தொடரில் இரண்டு இதழ்களோடு நின்று போன இலக்கியக் காளான்கள் பற்றிக் கூட விலாவாரியகச் சிலரால் பேசப்பட்டது. இலக்கியப் பிரபலங்கள் சில பேருக்குத் தாங்களே பங்களித்த 'தாயகம்' நினைவுக்கு வரவில்லை. எல்லாமறிந்த விமர்சகர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முயல்கிறவர்கட்குக்கூடத் தாயகம் என்ற பேரை உச்சரிக்கத் தயக்கமாக இருந்தது ஏன்?

இருபத்தைந்து ஆண்டுகளாகப் பல இன்னல்கள் நடுவிலும் யாழ்ப்பாணத்திலிருந்து தொடர்ந்து வெளிவருகிற இலக்கிய இதழ் தாயகம் மட்டுமே. ஒரு வேளை இதுதான் இவர்களுடைய மறதிக்குக் காரணமாக இருக்குமோ ?

எதேச்சையாக எவருடைய பேராவது விடுபட்டுப் போனால் இருட்டடிப்பு என்று கூவுகிற கூட்டம் இதற்கு எப்படி மௌன அங்கீகாரம் வழங்குகிறதோ தெரியவில்லை.

இருட்டடிப்பு ஒரு கலை. கலை கலைக்காகவே !

## சுண்ணாம்பில் இருக்கிறது சூட்சுமம் !

ஜூலை மாதம் ரூபவாஹினியில் (வேறெதிலாக இருக்க முடியும்) விடுதலைப் புலிகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்குமான ஒரு புதிய விளக்கம் முன்வைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறையில் கள்ளக் கடத்தலைக் கட்டுப்படுத்த 1970களில் அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுத்ததாலேயே விடுதலைப் புலிகள் இயக்கம் உருவானது என்று விரிவாக விளக்கப் பட்டுள்ளது.

தரப்படுத்தல், 1972 அரசியல் யாப்பு, தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதம், 1977, 1983 வன்முறைகள், நூலக எரிப்பு இவையெல்லாம் சின்ன விஷயங்கள்.

சாதியையும் குறிப்பிட்டு விளக்கம் தராததற்கு ரூபவாஹினியின் செய்தி ஆய்வாளர்களைப் பாராட்டாமல் விட இயலுமா ?

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
PUTHIYA POOMI
சுற்று 07 ஜூலை/ஆகஸ்ட் 2000 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 36

S. 47, 3வது மாடி, கொழும்பு மத்திய சந்தைக்கட்டிடத் தொகுதி, கொழும்பு 11, இலங்கை. தொலைபேசி இல. 435117, 335844

# மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்க வேண்டும்

*1953 ஆண்டு ஆகஸ்ட் 12 ஆம் திகதியை நினைவூட்டத்தக்கதாக சமகால நெருக்கடிகள் அமைந்துள்ளன. வாழ்க்கை செலவு என்றில்லாதவாறு அதிகரித்துள்ளது. நாளாந்த உணவுத் தேவைகள் பூர்த்தி செய்து கொள்ள முடியாத அளவுக்கு மக்கள் கஸ்டப்படுகின்றனர். இருவர் சந்தித்துக் கொண்டால் எவ்வாறு வாழ்க்கைச் செலவை சமாளிக்கிறீர்கள் என்பதே முதலாவது விசாரணையாக இருக்கிறது. எப்படி சுகம் என்பது இரண்டாவது விசாரனையாக மாறிவிட்டது. அந்தளவுக்கு வாழ்க்கை செலவை சமாளிக்க முடியாது மக்கள் திணறுகிறார்கள்.*

*காஸ் விலை அதிகரிப்பு எரிபொருட்களின் விலை அதிகரிப்பு போக்குவரத்து கட்டண உயர்வு சீனி விலை உயர்வு அடுத்தடுத்து ஏற்பட்டுள்ளன. இலங்கை நாணயத்தின் பெறுமதி குறைந்துள்ளது. அதாவது அமெரிக்க டொலர் ஒன்றுக்கு கொடுக்க வேண்டிய இலங்கை ரூபாவில் பெறுமதி அதிகரித்துள்ளது. இதனால் ஏறக்குறைய எல்லா அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதகரித்துள்ளன. அத்துடன் சாதாரன வியாபாரம் ஸ்தம்பிதம் அடைந்து வருகிறது. நடுத்தர வர்க்கத்தினரே வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் தடுமாறுகின்றார்கள் என்றால் அதற்கு அப்பால் உள்ள கீழ் நடுத்தரவர்க்கம், தொழிலாளி விவசாயி வர்க்கம், மற்றும் அன்றாட உழைப்பவர்களின் கதி விபரிக்க முடியாதளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. மக்கள் வீதியில் இறங்குவதைத் தடுப்பதற்காக மாவின் விலையை மூன்று ரூபாவால் குறைத்தனர். அதனால் பாணின் விலை அதிகரிக்கப்படவில்லை. ஆனால் இதுவும் எத்தனை நாட்களுக்கு என்ற நிலையை காணப்படுகின்றது.*

*வாழ்க்கை செலவை சமாளிப்பதற்கு ஏற்ப கூடுதலாக உழைப்பதற்கு இருக்கும் வழிவகைகள் இருக்கிறதா என்ற ஏகாதிபத்திய உலகமயமாதலின் கருத்தியல்களை சில இளைஞர்கள் அலசிப்பார்க்கிறார்கள். பின்னவீனத்துவம் என்ற அடிப்படையிலும் கூடுதலாக உழைக்க முடியுமா என்று சில புத்திஜீவிகள் தேடல் செய்கிறார்கள்.*

*ஆனால் 1953 ஹர்த்தால் காலத்திலும் வாழந்து இன்றும் வாழ்பவர்கள் அதுபற்றிய அறிவுடையவர்கள். அன்று வாழ்க்கை செலவு உயர்வினை ஆட்சேபித்து டட்லிசேனநாயக்க அரசாங்கத்திற்கு எதிராகஇந்நாட்டு மக்கள் மேற்கொண்ட புகழ் மிக்க ஹர்த்தால் போராட்டத்தை நினைவு கூருகிறார்கள். டட்லி சேனநாயக்கா வழமை நிலையில் அவரது அமைச்சரவை கூட்டத்தை நடத்த முடியாது கடலிற் கப்பலில் இருந்து நடாத்த வேண்டிய அளவிற்கு அந்த ஹர்த்தால் போராட்டம் வீறுபெற்று வெகுஜனத் தன்மை பெற்றதாக இருந்தது. நாட்டின் சகல விதமான நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தது.*

*அன்றிருந்த நிலைமையை விட பன்மடங்கு வாழ்கைச் சுமை அதிகரித்திருந்தும் மக்கள் இன்று மௌனமாக்கப்பட்டிருப்பதேன் ?*

*ஏகாதிபத்திய சார்புடைய முதலாளித்துவ பேரினவாத அரசாங்கம் இன்று அதனது பிரசாரங்களிலும் மக்களை திசை திருப்பி அடக்கி வைத்திருப்பதிலும் உச்சமாக செயற்படுகிறது.*

*எல்லாவற்றுக்கும் மேலாக "யுத்த நிலைமை" பெரும்பாலான மக்களை இனரீதியான வரையறைகளுக்குள்ளேயே தொடர்ந்தும் இருக்க வேண்டிய கட்டாயங்களை ஏற்படுத்தி வருகிறது.அவற்றை மீறி மக்களை அணிதிரட்டக்கூடிய இடதுசாரிகள் ஜனநாயக சக்திகள் அரசாங்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளன. அந்த சக்திகள் அன்று 1953 ஹர்த்தாலை நடத்துவதில் முக்கிய பங்காற்றின. ஆனால் இன்று விலை உயர்வுக்கும் கட்டன அதிகரிப்புக்கும் காரணம் கூறி நியாயப்படுத்துகிறார்கள்.*

*எனவே இன்று மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் நேர்மையான ஜனநாயக, இடதுசாரி சக்திகள் முக்கிய பங்காற்ற வேண்டிய பொறுப்புகளை ஏற்று முன்செல்ல வேண்டியிருக்கிறது. அவை தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான குறுகிய கண்ணோட்டத்துடன் செயற்படுவதை நிறுத்திக் கொண்டு தமது பாதைகளை திருத்தி அமைத்துக்கொள்ளாது விட்டால் அவர்களுக்கு எதிர்காலம் இருக்கப் போவதில்லை. பழைய இடதுசாரிகள் சென்ற அதே பாதையில் செல்வதன் மூலம் மக்களது பிரச்சினைகளுக்கும் அவர்களது வாழ்வு மாற்றத்திற்கும் செயல்பட முடியாது.*

*வாழ்க்கைச் செலவின் சுமையால் தலை அடிவாங்கி நிற்கும் மக்கள் குறிப்பாகச் சிங்கள மக்கள் எத்தனை நாட்களுக்கு பேரினவாத யுத்தம் என்று காரணம் காட்டப்படுவதை ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள். அரசாங்கத்தின் இன்றைய நிலையை எதிர்த்து தேர்தல் லாபம் பெற யூ.என்.பி. முயலுகின்றது. ஆனால் அவர்கள் மட்டும் இரட்சகர்களாக முடியாது.*

*எனவே மக்கள் தமக்குள்ள பிரச்சினைகளைத் தாமே சிந்தித்து ஒரு பரந்த வெகுஜன திரள்வுக்கும் போராட்டங்களுக்கும் முன்வருவதையிட்டு வாய்ப்பான அமைப்புகள் மூலம் சிந்திக்க முன்வரல் வேண்டும். தேர்தல் வெற்றிகளாலோ அல்லது ஆளும் வர்க்க கட்சிகளாலோ எவ்வித மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை. மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்க வேண்டிய காலம் வந்துள்ளது என்பதே இன்றைய நிலையாகும்.*

***ஆசிரியர் குழு***

# தேசிய இனப் பிரச்சினையும் தமிழர் தரப்பு கட்சிகளும்

**வெகுஜனன்**

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை ஒரு நூற்றாண்டு காலத்தை உள்ளடக்கியது. பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகள் இன ஒடுக்கு முறையினை நடைமுறைப்படுத்தி வந்ததில் ஒன்றுக் கொன்று சளைத்தவை அல்ல என்பதை நிருபித்து வந்துள்ளன. கொடிய யுத்தம் முன்னெடுக்கப்படும் இன்றைய சூழலிலும் கூட இவ் ஆளும் வர்க்கக் கட்சிகள் தமது பேரினவாத அகங்காரம் கொண்ட நிலைப்பாட்டை தளர்த்திக் கொள்ளவோ அல்லது கீழ் இறங்கி வந்து பிரச்சினையைத் தொட்டு அதன் நியாயமான தீர்வுக்கு வழி காணவோ தயார் இல்லாத நிலையே காணப்படுகின்றது. ஆளும் வர்க்க நிலையில் இருக்கும் பிரதான கட்சிகள் வெளிவேஷத்திற்கு ஜனநாயகம், இன ஒற்றுமை நாட்டுப் பற்று என்பன பற்றி நிறையப் பேசிக்கொள்வார்கள். அவற்றை விழுங்கிக் கொண்டு தலையாட்டவும் தமிழ் மேட்டுக் குடிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். ஆனால் பேரினவாத ராணுவ ஒடுக்கு முறையின் உள்ளார்ந்த நிலைப்பாடு கீழ் வருவன வற்றிலேயே ஊறி நிற்கின்றது.

"இலங்கை சிங்களவருடைய நாடு, இந்நாட்டை விட்டால் வேறு நாடு எங்களுக்கு இல்லை. நாங்கள் பெரும்பான்மையினர், பௌத்த மதத்தைப் பேணிப் பாதுகாக்கும் புனிதக் கடமை எமக்கு உண்டு, இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு கால நாகரீகவரலாறும் எங்களுக்கு உண்டு, தமிழர்களும் ஏனையவர்களும் வந்தேறு குடியினர், அவர்கள் பூர்வீகக் குடிகள் அல்லர். அவர்களுக்கு பாரம் பரிய பிர்தேசம் என்று ஒன்று இல்லை. அவர்கள் அந்நியத் தமிழர்" இத்தகை சிந்தனையானது ஆளும் பிரதான கட்சிகள் மத்தியில் வேர் ஊன்றிய பேரினவாதக் கருத்துக்களாகும். இவற்றின் அடிப்படையிலேயே இலங்கையில் பேரினவாதம் ஆட்சி புரிந்து இன்றைய யுத்த வடிவிலான தேசிய இனப் பிரச்சினையை வெ்ளிப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறு வளர்ச்சி பெற்ற வந்த பௌத்த சிங்களப் பேரினவாதத்தை அன்று முதல் இன்றுவரை எதிர்த்து நிற்பதில் தமிழர்கள் தரப்பில் ஒரு முகத்தன்மை இருந்து வரவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் இனத்தை விட வர்க்கம் , என்பது அடிப்படையான தாக அமைந்திருந்தமைதான். எவ்வளவிற்கு இனம் மொழி உள்ளிட்ட தமிழ்த் தேசியம் பற்றி இக் கட்சிகள் பேசி வந்த போதிலும் வர்க்க நலன்களே மேலோங்கி முன்னுக்கு நின்று கொண்டது. வரலாற்றை நேர்மையாக அணுகும் எவரும் இதனைக் காண்பர்.

இன்றைய சமகாலச் சூழலில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே இதுவரை தமது தேசியவாத நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்காத நிலையில் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுப்பதில் உறுதியாக இருந்து வருகின்றனர். அவர்களது தமிழ்த் தேசியவாத நிலைப்பாடு தென்னிலங்கையின் ஆளும் பேரினவாத உயர் வர்க்க சக்திகளுடன் பேரம் பேசி வர்க்க நலன்களுக்காகத் தம்மை இழக்காத வரையில் அது முற்போக்கானதாகும். ஆனால் ஒரு கட்டத்தில் அவர்களும் கூட வர்க்க நிலைப்பாட்டில் எத்தகைய முடிவை மேற்கொள்வர் என்பதை சிறிது பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம், மேற்கு நாடுகள், இந்திய மேலாதிக்கத்தின் புதிய நிலைப்பாடு போன்றவற்றில் எவ்வாறான முடிவை புலிகள் இயக்கம் முன்னெடுக்கப் போகின்றது என்பதிலேயே அவர்களது தீவிர தமிழ் தேசியத்திற்குப் பின்னால் இருந்து வரும் வர்க்க அடிப்படையின் உண்மைத் தோற்றம் வெளிப்படும்.

இவ்வாறு கூறுவதன் மூலம் தேசியவாதம் நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதல்ல அர்த்தம். குறிப்பானது என்னவெனில் தேசியவாதத்தின் எல்லையையும் அதன் முற்போக்கான அல்லது பிற்போக்கான நிலைப்பாட்டையும் இறுதியில் வாக்க அடிப்படையே தீர்மானம் செய்கின்றது என்பதாகும்.

இதற்கான உதாரணத்தை சமகாலத்தின் ஏனைய தமிழ்க் கட்சிகளில் காணமுடியுமாகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்த் தேசியத்தின் பிற்போக்கான கூறுகளினது மொத்தம் அனைத்தையும் தமது தொடர்ச்சியான நடத்தைகள் மூலம் வெளிக்காட்டி வந்துள்ளது. இன மொழி அடிப்படையில் பேரின வாதக் கட்சிகளுடன் முரண்பட்டு நிற்பது போன்று தோற்றம் காட்டி நிற்பார்கள். அதேவேளை வர்க்க ரீதியில் ஒன்று கலந்து கூடிக் கலாவி தமது வர்க்க சக்திகளுக்குரிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வார்கள். இது பொன்னம்பலம் இராமநாதன் அருணாசலம் சகோதரர்கள் காலம் முதல் ஜி.ஜி. பொன்னம்பலம் எஸ். ஜே.வி. செல்வநாயகம் அ. அமிர்தலிங்கம் ஊடாக இன்றைய மு. சிவசிதம்பரம் இரா. சம்மந்தன் வரை தொடரும் நேர்ப் போக்கில் வளர்ந்து வந்த ஒன்றாகும்.

> "தேசிய வாதத்தின் எல்லையையும் அதன் முற்போக்கான அல்லது பிற்போக்கான நிலைப் பாட்டையும் இறுதியில் வர்க்க அடிப்படையே தீர்மானம் செய்கிறது."

அடுத்து ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்தி நின்று போராடிக் களைத்த பின்பு தேசிய ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்ததாகக் கூறிக் கொள்ளும். ஈ.பி.டி.பி. புளோட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகள் தமிழ் தேசியவாதத்தை அடிப்படையில் கொண்டே தோன்றின. இவ் இயக்கங்களில் சில மார்க்சிசம் சோஷலிசம் பற்றியும் பேசிக் கொண்டன. தமிழ் மக்கள் மத்தியில் தொழிலாளர்கள், விவசாயிகள், சாதியத்தால் ஒடுக்கப்பட்ட மக்கள் போன்றவர்களிடையே ஒரு ஈர்ப்பைப் பெறுவதற்கு அவ்வாறு மார்க்சிய சுலோகங்களை உச்சரித்துக் கொண்டார்களே தவிர அவ் இயக்கங்களின் வர்க்க நோக்கும் போக்கும் அடிப்படையும் பாட்டாளி வர்க்க நிலைக்கு அண்மித்த ஒன்றாகக் கூட இருக்க வில்லை. மார்க்சிச தத்துவத்தின் தெளிவாலும் பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டின் உயர்ந்த நடைமுறைகளாலும் உருவாகிய 'தோழர்' 'தோழர்கள்' தோழமை' போன்ற சொற்றொடர்களைக் கூட மிகவும் கேவலப் படுத்திய பணியையும் இவ் இயக்கங்களில் சில செய்து கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த தமிழ்க் கட்சிகள் தமிழ்த் தேசியவாதத்தின் பிந்திய தலைமுறையினர். இவர்கள் தமது முன்னோர்கள் பாராளுமன்றத்திலும் வெளியிலும் ஆளும் வர்க்கப் பேரினவாதக் கட்சிகளுடன் எவ்வாறு வர்க்க உறவு பூண்டு நடந்து கொண்டார்களோ அதனையே இன்றும் செய்து வருகின்றனர். மேற்கூறிய தமிழ்க் கட்சிகள் எனப்படுபனவற்றில் ரெலோ இயக்கம் தன்னை ஐக்கிய தேசியக் கட்சியோடு சாய்த்து வைத்துக் கொண்டுள்ளது.

ஏனைய மூன்று கட்சிகளும் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் ஐக்கியத்தையும் உறவையும் கொண்டுள்ளன. தமிழர் கூட்டணி ஏதோ செல்வநாயகம் வழியில் தமிழ் தேசியத்திற்கான புனிதத்தைப் பாதுகாத்து நிற்பதாகக் கூறிக் கொண்டு அரசாங்கத்திற்கு மறைமுக ஆதரவு வழங்கி நிறகிறது.

மொத்தத்தில் பார்க்கின்ற போது இந்த ஐந்து தமிழ்க் கட்சிகள் எனப்படுபவை பகலில் தமிழ்த் தேசியவாதமும் இரவில் வர்க்க உறவும் கொள்வதிலுமே தமது அரசியலை நடாத்துகின்றன. இது ஜி. ஜி. பொன்னம்பலம் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அ. அமிர்தலிங்கம் போன்ற தமிழ்த் தேசியவாதத் தலைவர்களின் வழியைப் பின்பற்றும் அரசியல் நடைமுறைகளேயாகும். இது ஒரு வகை அரசியல் பிழைப் பென்று கூறினால் மிகையானது அல்ல.

இத்தகைய அரசியல் அவல நிலை சில தலை வர்களின் சொந்தக் குறைபாடு அல்ல. அடிப்படையில் அவர்களது வர்க்க நிலைப்பாட்டின் வெளிப்பாடாகும். தேசியவாதம் எந்தளவிற்கு செல்லும்படியாகக் கூடியது என்பதும் அது வர்க்க நலன்களையும் தேவைகளையும் கடந்து செல்ல முடியாத ஒன்று என்பதையும் நமக்கு மீண்டும் மீண்டும் நிருபித்துக் காட்டுகின்றது. தேசிய இன ஒடுக்குமுறைக்கு உள்ளான ஒரு தேசிய இனம் தனது விடுதலையை தனியே தேசியவாத எல்லைகளுக்குள் நின்று மட்டும் தேடிக்கொள்ள முடியாது என்பதையும் சில விதிவிலக்கான சூழல்களில் தேடிக் கொள்ளப்படும் விடுதலை என்பது கூட ஆளும் நிலைசார்ந்த உயர்வர்க்க சக்திகளால் விடுதலைக்குப் பயன் படுத்திய துப்பாக்கி கொண்டே அபகரிக்கப்பட்டு விடும் என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். கடந்த இரண்டு தசாப்த காலத்தின் போராட்டமும் அதில் தமிழ்த் தேசியவாதம் வகித்த பிரதான பாத்திரமும் நமக்கு பல பாடங்களைத் தந்து நிற்கின்றன. இதனைத் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் உள்ள தொழிலாள, விவசாய, சாதிய ஒடுக்கு முறைக்கு உள்ளான பரந்து பட்ட உழைக்கும் வர்க்க மக்கள் உணரவேண்டிய காலம் தோன்றியுள்ளது. இத்தகைய மக்கள் மத்தியில் பாட்டாளி வர்க்கத்தின் மாக்சிசம் லெனினிசம் காட்டும் மார்க்கத்திலான தேசிய இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் புதிய முனைப்புகள் தோற்றம் பெற வேண்டும். அதற்கான சூழல்கள் உருவாக்கப்படுவது அவசியமாகும்.

○○○

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தலைமைகளுக்கு பேரினவாதக் கட்சிகளிடம் மண்டியிடவே முடியும்.

ம. அழகேசன்

மலையகத் தொழிற்சங்கத் தலைவர்களில் அதிகமானவர்கள் ஐ.தே. கட்சியுடனேயே அணிசேர்ந்துள்ளனர். அவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியை விட ஐ.தே. கட்சி நல்லது என்ற அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் உருவாக்கி இருக்கின்றனர். மலையக மக்கள் முன்னணி தொ. தே. சங்கம். இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் போன்றன வெளிப்படையாக ஐ. தே. கட்சியுடன் அவற்றின் உறவை வலுப் படுத்தி வருகின்றன. இ.தொ.கா. வின் அதிருப்தியாளர்களான அந்த ஐந்து எம்பிகளும் கூட ஐ. தே. கட்சியில் காதல் கொண்டவர்களாக இருக்கின்றனர். அத்துடன் இ.தே.தொ. தொழிலாளர் சங்கம் நேரடியாக ஐ. தே. கட்சியின் தொழிற்சங்கமாக மலையகத்தின் அதன் வேலைகளை முன்னெடுத்து வருகின்றது.

ஐ. தே. கட்சியுடன் அணிசேர்ந்துள்ள தொழிற்சங்கங்கள்கள் அவற்றின் நிலைமையை உயர்த்திக் கொள்வதற்காகவே அதனுடன் அணிசேர்ந்துள்ளன.

அன்மையில் நடைபெற்ற சம்பள உயர்வு போராட்டத்தில் ஐ.தே.க. வுடைய நிலைப்பாடு தோட்டக்கம்பெனிகளுக்கு சார்பாகவே இருந்தது. அதாவது அக்கட்சியின் தொழிற்சங்கமான இ.தே.தோ. சங்கம் இ.தொ.கா. தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி என்பன தோட்டகம்பெனிகளுக்கு இணங்கிப்போய் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்தன.

அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் ஏற்பாட்டை சேர்ப்பதற்கு ஐ.தே.கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மலையக மக்களின் நாடற்றவர் பிரச்சினையை தீர்ப்பதற்கான நிலைப்பாட்டை எதிர்க்கும் ஒரு கட்சியை எப்படி மலையக மக்களுக்கு ஏற்றதொரு கட்சி என அதனுடன் அணிசேர்த்துள்ளவர்கள் தெரிவிக்கப்போகின்றனர்.

பெருந்தோட்டத் துறையைத் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைத்து தோட்டத்தொழிலாளர்களின் இன்றைய பரிதாப நிலையை ஏற்படுத்தியவர்கள் ஐ.தே. கட்சியினரே. அதாவது தோட்டக்கம்பெனிகள் பலமான இடத்தில் அமர்த்தப்பட்டதுடன் தொழில் ரீதியாகவும், வருமான ரீதியாகவும் ஸ்திரமற்ற நிலைமைக்கு தொழிலாளர்களை தள்ளியதும் ஐ. தே. கட்சியேதான்.

அதேபோன்று மலையக இளைஞர்கள் மீதான பொலிஸ் அடக்குமுறைகள், கைதுகள், தடுப்புக்காவல்கள் என்பன ஐ.தே.கட்சி காலத்திலேயே தொடங்கப்பட்டன. அக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் கைது செய்யப்பட்டவர்களில் அதிகமானோர் இன்றும் தடுப்புக்காவலில். இருந்து வருகின்றனர்.

பொருளாதார ரீதியாக இன்று பொதுஜன ஐக்கிய முன்னணிக்குப் ஐ.தே.க.விற்கும் எவ்வித வித்தியாசம் இல்லை. அதனால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் பொருளாதார ரீதியாக எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடிய திட்டங்களும் ஐ.தே.கட்சியிடம் இல்லை. வர்க்க அடிப்படையிலும் இன் ரீதியிலும் மலையக மக்களை திட்டமிட்டு ஒடுக்கிப் புறக்கணித்து வந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் என்பதை வரலாறு தெளிவாக எடுத்துக் காட்டும். அவ்வாறே சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நடந்து வந்துள்ளது.

## தொண்டமான் காலத்திலிருந்து தொடரும் காட்டிக் கொடுப்பு

இரண்டு கட்சிகளுமே தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை மறுத்து வந்த கட்சிகளே என்பதுடன் தொடர்ந்து அதே நிலைப்பாட்டையே கொண்டுள்ளன.

இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசியல் தீர்வு காண்பதில் மிகவும் பின்நிற்பது ஐ.தே. கட்சியே. இலங்கையின் ஆட்சிமுறைமை தொடர்ந்து ஒற்றையாட்சியாகவே இருக்க வேண்டும் என்றும் காணிசம்பந்தமான விடயங்கள் மத்தியில் அரசிடமே இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தொடர்ந்து ஐ.தே. கட்சி வலியுறுத்தி வருகிறது. அவ்வகையான கட்சி மலையகத் தமிழ் மக்களின் இனஉரிமைகளை உறுதி செய்ய எவ்வாறு முன்வரப் போகிறது.

எனவே ஐ. தே. கட்சியுடன் அணிதிரண்டுள்ள மலையக தொழிற்சங்கத் தலைவர்கள் அவர்களின் சுயலாபத்திற்காகவன்றி மலையக மக்களின் நண்மைக்காகவல்ல என்பதை மலையக மக்கள் விளங்கிக் கொள்ளாமல் இல்லை. வெறும் தேர்தல் கண்ணோட்டத்தில் பாராளுமன்ற பதவிகளை பற்றிய கனவுகளுடன் இருக்கும் தொழிற்சங்கத் தலைவர்கள் மலையக மக்களை பற்றிச் சிந்திப்பவர்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

மலையக மக்களின் இன்றைய நிலையையும் எதிர் காலத்திற்கான அடிப்படைகளையும் சிந்திக்கும் எவரும் முதலாளித்துவ பேரினவாத நிலைப்பாடு கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியிடமோ அன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான பொதுசன முன்னணியிடமோ எதையும் எதிர் பார்க்க முடியாது. பாராளுமன்ற மாகாணசபை போன்ற பதவிகளையும் அவற்றின் ஊடாகத் தத்தமது சுய முன்னேற்றங்களையும் காண நிற்பவர்கள் மட்டுமே அக் கட்சிகளைக் கட்டி அணைத்து நிற்க முடியும். தொழிலாளி வர்க்கம் இந்த அண்டிப் பிழைக்கும் போக்குக்கு அப்பால் தனது வர்க்க இன விடுதலைக்கான பாதையில் வழி நடக்க தன்னைத் தயார்படுத்த வேண்டும். அரசியல் கருத்தியல் ரீதியல் சிந்திக்கும் சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து மலையக மக்களின் விடுதலைக்கு செயல்பட முன் முயற்சி எடுத்தல் வேண்டும். தொண்டமான் காலம் முதல் சந்திரசேகரன் காலம் ஊடாக இன்றைய ஆறுமுகம் தொண்டமான் வரையான இரண்டு பேரினவாதக் கட்சிகளுக்கும் வர்க்க விசுவாசத்துடன் தொண்டு புரிந்துள்ள நிலையை மாற்ற வேண்டும். புதிய சக்தி புதிய பாதை போராட்டப் பாதை மூலம் புதிய வாழ்வுக்கு மலையகப் பாட்டாளி வர்க்கமும் இளம் தலைமுறையினரும் தம்மைத்தயார் படுத்த வேண்டும். இதை விட வேறு குறுக்கு வழி கிடையவே கிடையாதா.

# ஓ. ஏ. ராமையா எந்த வர்க்கத்திற்கு சேவை புரிகிறார் ?

தேசிய நாளிதழ் ஒன்றின் ஞாயிறு வெளியீட்டில் செங்கொடிச்சங்க பொதுச்செயலாளர் ஓ.ஏ. இராமையா சில விளக்கங்களை கூறி கட்டுரை எழுதியிருந்தார். முழு மலையகத் தமிழ் மக்களையும் இணைக்ககூடிய அரசியல் வெகுஜன இயக்கமொன்றின் அவசியம் பற்றி எழுதப்பட்டிருந்த பத்தியொன்றுக்கு கோபமாக் பதிலெழுதியிருந்தார் இராமையா. அவ்வாறான அமைப்பொன்றின் வர்க்கத் தலைமை எப்படி அமையும் என்றும், அவ்வாறான அமைப்பு மலையகத் தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தின் அக்கறைகளுக்கு எதிராக இருக்கும் என்றும் எழுதியிருந்தார்.

அவரிடம் சில விடயங்களைக் கேட்டு வைக்கவும் சொல்லிவைக்கவும் விரும்புகிறேன்.

முழு மலையக மக்களையும் ஐக்கியப்படுத்தக் கூடிய ஒரு அமைப்பு வேண்டும் என்று சில மலையக புத்திஜீவிகள் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றனர். அவ்வியக்கத்தின் வர்க்கத்தலைமை பற்றி கவலைப்படும் இராமையா எப்படி இந்திய வம்சாவாளி மக்கள் பேரணியில் இணைந்து செயற்பட்டார். சௌமியமூர்த்தி பேரனனான ஆறுமுகத்தையும் தனது தலைவர்கள் என ஏற்றுக்கொண்டது மட்டும்மன்றி அவர்கள் மலையக மக்களின் தலைவர்கள் என்று கூறியது எப்படி நியாயமாகும். அவரது தொழிற் சங்கத்தை கூட பொதுஜன ஐக்கிய முன்னணியிடம் வர்க்க நிலைமாறிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிடமும் தாரைவார்த்து விட்டாரே அது எந்த வர்க்கத்திற்குரிய செயலாகும். இலங்கையின் பாட்டாளி வர்க்கத்திற்கு எதிரான தாராளமய, திறந்த பொருளாதார பூகோளமயமாதலை ஏற்றுக் கொண்டு ஒழுகும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதும், அதற்கு முட்டுக்கொடுக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் தனது சுய பிழைப்பிற்கு சேர்ந்து இருப்பதும் எப்படி தொழிலாளர் வர்க்க நிலைப்பாடாகும்.

கள்ளுக்கடைக்காரர்கள், சாராயக் கடைக்காரர்கள் வட்டிக்கடை காரர்கள் மீது சீறிப்பாயும் அவர் அவர்களுக்கு தலைமை தாங்கும் தலைவர்களின் தலைமையை ஏற்றுக் கொள்வது எப்படி ?

தொழிற்சங்கத்தின் சொத்தான அட்டனில் இருந்த மக்கள் அச்சத்திற்கு இன்று ஏற்பட்ட நிலைமை என்ன ? அவ்வச்சகம் தொழிலாளர் சொத்து என்பதை இப்போதும் மறுக்காமல் ஏற்றுக்கொள்கிறாரா ? அதை தட்டிக் கேட்பதில் தொழிலாளர்களின் பிள்ளைகளான சில ஆசிரியர்கள் முன்நிற்பதால் அவருக்கு மலையக ஆசிரியர்கள் என்றால் பெரும் அலர்ஜி

தோட்ட தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டி அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் அமைக்கப்பட்டது என்று கூறுவதன் மூலம் அதன் தொழிற்சங்கவாதத்தை அவர் வெளிப்படுத்துகிறார். ஒரு தொழிற்துறைக்கு (ஒரு அச்சாறான) ஒரு தொழிற்சங்க சம்மேளனமே இருக்க வேண்டும் என்று கூறுவதை தொழிலாளர் வர்க்க உணர்வென்று நியாயப்படுத்த முடியுமா ? ஒரு தொழிற்துறைக்கு ஒரு தொழிற்சங்க சம்மேளனம். என்பது முதலாளிகள் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் தினித்த கருத்தியல் என்பதை அறியமாட்டாரா ?

தொழிற்சங்க கூட்டுக்கமிட்டியின் தலைவர் மலியகொட ஒரு பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் அரசியலுக்கு அப்பால் அரசியல் கலப்பில்லாத தொழிற்சங்க இயக்கத்தை கட்டி வளர்க்க வேண்டும் என்றும் எழுதியிருந்ததை வாசிக்காமல் அவருக்கு சப்பைக் கட்டுவது இராமையாவின் கபடித்தனத்தையே காட்டுகிறது. எனவே மலிய கொடவை போலந்தின் வலேசாவுடன் கட்டுரை ஒப்பிட்ருந்ததை எவ்வாறு மறுத்துரைப்பார். மலியகொடவை வலேசாவுடனாவது ஒப்பிடலாம். இராமையாவை யாருடன் ஒப்பிடுவது? மலையக மக்கள் மாக்சிய லெனினிஸ இயக்கத்தின் மீது இடதுசாரி இயக்கத்தின் மீது நம்பிக்கை வைக்க முடியாத அளவிற்கு அந்த இயக்கத்தைச் சாப்பிட்டு சீரழிவுகளில் ஈடுபட்ட இராமையா மலையக மக்களுக்கு தேவையான பாட்டாளி வர்க்க தலைமை பற்றி கவலைப்பட்டால் மட்டும் அவரை மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் என்றோ இடதுசாரி என்றோ யாரும் நம்பிவிடப் போவதில்லை. பிறகு ஏன் அவர் தேசிய நாழிதழ்களில் முக்கி முனக்கி கொண்டு எழுதுகிறார் என்பது புரியவில்லை. இடதுசாரி தொழிற்சங்க இயக்கத்தை சீரழித்து மட்டுமன்றி மாற்று இடதுசாரி இயக்கங்களே மலையகத்தில் வளராமல் இருப்பதற்கு அவரது குறுகிய சாதிவாதம், குறுகிய தேசியவாதம், பிரதேசவாதம் என்பவற்றை எப்படியெல்லாம் பிரயோகிக்க முடியுமோ, அப்படியெல்லாம் பிரயோகித்து விட்டு மலையக மக்களுக்கு ஏற்படக்கூடிய வர்க்கத்தலைமை பற்றிக் கவலைப்படுவது எந்த வர்க்கத்தைக் காப்பாற்ற?

70 பதுகளின் இறுதியில் மலையக மக்கள் இயக்கத்தின் நெருக்கமாக வேலை செய்து மலையகத் தமிழ் மக்களை ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்று ஏற்றுக் கொண்டவர் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் நெருக்கம் ஏற்பட்டவுடன் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் பற்றி கவலைப் படுவதே இல்லை. தற்போது இந்திய வம்சாவளி மக்கள் என்று அழைப்பதையே அவர் பெருமையாக கொள்கிறார். பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து தனது சுயநலத்தேவைகளுக்காக மலையகத்தமிழ் மக்களின் சுயநிர்ணயம் பற்றி உச்சரிப்பதையே 'முதலாளித்துவம்' என்று கூறுகிறார். செஞ்சட்டை அணிந்து கொண்டு முதலாளித்துவமாகிப் போன இராமையா போன்ற பழைய 'தோழர்களின்'' சொல்களாலும், தேசியவாதம் என்று கூறிக்கொண்டு வரலாற்றை மறந்த சில சில்லறைகளாலும் மலையகத்தில் பாட்டாளி வர்க்க, இடதுசாரி இயக்கத்திற்கு பின்னடைவுகள் ஏற்பட்டதென்னவோ உண்மைதான். மலையக மக்களின் விடுதலையை நோக்காகக் கொண்ட மலையகப் பாட்டாளி வர்க்க அடிப்படையுடைய மக்கள் இயக்கமொன்று வளர்வதும், அதன் போக்குகள் வளர்ச்சியடைவதும் வரலாற்றுத் தேவை. அந்த வளர்ச்சியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. ஆதலால் இராமையா போன்றவர்கள் தொழிலாளர் வர்க்கம் பற்றியும் மாக்சிசம் லெனினிசம் பற்றியும் புரட்சி பற்றியும் கதைக்காமல் தமது பாதையில் சென்று மலையக உயர் வர்க்க சக்திகளோடு மேலும் ஐக்கியபட்டிருப்பதே பொருத்த மானதாகும்..

**பி. வேலு**
அட்டன்.

# சந்திரிகாவின் கட்டுப்பாட்டில் இ. தொ. கா. ?

இ.தொ.கா.வில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை தீர்த்துக் கொள்ள இ.தொ.கா.வின் தலைவர் ஆறுமுகம் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துள்ளார். அதிருப்தியாளர்களுடனான பேச்சுவார்த்தையில் அவர்கள் தன்னைப் பற்றி விமர்சிக்க கூடாது என்று கேட்டுக் கொண்டுள்ளார். அதேபோன்று அதிருப்தியாளர்களும் ஜனாதிபதியை சந்தித்துள்ளனர். இ.தொ.கா.வினுள் இருக்கும் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதியின் உதவியை அவர்கள் நாடியுள்ளனர்.

சௌமிய மூர்த்தி தொண்டமானின் மறைவிற்குப் பிறகு இ.தொ.கா. வினை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஜனாதிபதி சந்திரிகா எடுத்துக் கொண்டுள்ளார் என்பது இதன் மூலம் தெரிகிறது.

பதவிகள் பட்டங்களுக்காக முட்டுக் கொடுக்கப் போனால் இறுதியில் பதவி பட்டங்களுக்காக தம்மையும் தமது ஸ்தாபனத்தையும் இழக்க வேண்டி நேரிடும். அதற்கு சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு பிந்திய இ.தொ. கா. இன்னும் ஒரு முழுமையான உதாரண மாகிறது. ஸ்தாபனத்திற்குள்ளும் வெளியிலும் யார் செல்வாக்கை கொண்டிருக்கிறார்கள் என்பதை விட தங்களுக்கு பட்டங்களையும், பதவிகளையும் வழங்கக் கூடிய அதிகாரம்படைத்தவர்களிடம் செல்வாக்கு இருக்கிறதா என்பதே முதன்மையடைகிறது. அதனாலேயே ஜனாதிபதி சந்திரிகாவிடம் நல்ல பெயர் எடுப்பதை இ.தொ.கா வின் இரண்டு தரப்பினரும் விரும்புகின்றனர்.

இ.தொ.கா. விற்குள் அதிருப்திப்பட்டு வெளியே நிற்கும் ஐவரும் மலையக மக்களுக்குக்காக நேர்மையான கொள்கை கொண்டு வெளியே வரவில்லை. அவர்கள் இ.தொ.காவின் அதிகாரத்தில் பங்கும் ஆட்சியில் அமைச்சர் பதவியும் பணப் பெட்டியில் பங்கும் கேட்டுக் கொண்டனர். அத்துடன் அமைச்சர் ஆறுமுகத்தின் அதிகாரமதையும் ஆணவத் தடிப்பும் வயதில் மூத்த ஐவரையும் மனம் நோகச் செய்து விட்டது. விட்டோமா பார் எனக் கூறி வெளியேவந்து சந்திரிகா ரனில் ஆகியோரிடம் பேரம் பேசுகின்றனர்.

நன்றி - நூலகத்திட்டம்



# தீர்வுத் திட்டம் தீர்வு அல்ல !

நாட்டின் தேசிய இனப் பிரச்சினை என்பது கடந்த ஒரு நூற்றாண்டில் வளர்த்தெடுக்கப்பட்ட ஒன்று. அதனை இன்றைய யுத்த நிலைக்கு கொண்டு வந்து விட்டவர்கள் ஆளும் வர்க்க பேரினவாத சக்திகள். அவர்களது இன வர்க்க இருப்புக்கும் சொத்து சுகபோக வாழ்விற்கும் அதிகார நிலைப்பிற்கும் இந்நாட்டின் தமிழ் முஸ்லீம் மலையக மக்கள் இன மொழி மத பிரதேச அடிப்படையில் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். இதற்கு எதிராக அவ்வப்போது எழுந்த ஜனநாயகப் போராட்டங்களின் உயர்ந்த நிலைப் போராட்ட வடிவமே இன்றைய தேசிய இன விடுதலைக்கான போராட்டமாகும். அப் போராட்டத்திற்கு பயங்கர வாதம் தீவிரவாதம் பிரிவினைக் கோரிக்கை என முத்திரைகள் குத்தப்பட்ட போதிலும் அப்போராட்டத்திற்குள் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகள் உறுதியாக உள்ளடங்கி நிற்கின்றன.

தேசிய இன ஒடுக்கு முறைக்கு உள்ளான மக்களின் உள்ளக் கொதிப்பையும் அவர்களது வாழ் நிலையையும் அன்றாட அவலங்களையும் எவர் ஒருவரால் புரிந்து கொள்ள மறுக்கப்படுகிறதோ அத்தகையவரால் போராட்டத்தின் நியாயப்பாடுகளை ஏற்றுக் கொள்ள இயலாது. அத்தகையவர் ஒவ்வொரு காரணங்கள் காண்பித்து படிப்படியாக ஒடுக்கு முறையாளர்களின் பக்கத்தில் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளவே செய்வர். எனவே ஒடுக்குமுறையை அதன் நிச வடிவில் ஏற்றுக் கொள்ளும் ஒருவராலேயே நியாயமான தர்வையும் வற்புறுத்தி நிற்க முடியும்.

இன்று ஆளும் • பொதுசன முன்னணியாலும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியாலும் இணங்கப்பட்டதாகக் கூறப்படும் தர்வுத் திட்ட யோசனைகள் தேசிய இனப்பிரச்சினையைத் தொட்டு நிற்கவோ அன்றி அண்மித்துக் கொள்ளவோ கூட இல்லை. அவ்விரு ஆளும் நிலை சார்ந்த பேரினவாதத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகளும் அதிகாரத்தை மத்தியில் இறுக்கி வைத்திருக்க வேண்டும் என்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டன. வடக்கு கிழக்கு இணைப்பை தற்காலிகமாக வைத்திருப்பதும், கிழக்கு மாகாணத்தில் மட்டும் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடாத்த உத்தேசிக்கப்பட்டிருப்பதும், நிலம்-நீர் பற்றித் தீர்மானிக்கும் அதிகாரத்தை மத்தியே கொண்டிருப்பதும் அந்த யோசனைகளின் முக்கிய அம்சங்களாகும், முன்னைய தீர்வுத்திட்டத்தில் பிராந்தியங்களின் ஒன்றியம் என்று கூறப் பட்ட அம்சம் நீக்கப்பட்டதன் மூலம் இது சிங்களவர்களுக்கும் பௌத்த மதத்திற்கும் உரிய ஒற்றையாட்சி நாடு தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதும் அப்பிரதேசங்களில் மிக நீண்டகாலமாக முஸ்லீம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் மறுக்கப் பட்டிருக்கிறது. அப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் பாரம்பரிய மக்களான தமிழ் முஸ்லீம் மக்களின் நலன்களை விட திட்டமிட்ட குடியேற்றங்களின் வாயிலாக குடியமர்த்தப் பட்ட சிங்கள மக்களின் நலன்களுக்கு பேரினவாத நிலைப்பாட்டின் மூலம் உறுதியளிக்கப் படுவதையே யோசனைகளில் காண முடிகின்றது. அவ்வாறே உள்ளூர் பாதுகாப்பு விடயங்களிலும் மத்தியின் அதிகாரமே மேலோங்கி நிற்குமாறு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் என்பவர் மத்தியின் அதிகாரத்தைச் சார்ந்து நிற்கக் கூடிய ஒரு பொம்மையாக இருக்க வேண்டுமே தவிர சுயமாக செயல்பட முடியாத வாரான நிர்வாக நடைமுறைகள் ஆக்கப் பட்டுள்ளன. ஆளுநர் என்பது கூட மத்தியின் கைளாக இருக்க வேண்டும் என்பதையே தீர்வுயோசனை வற்புறுத்துகின்றது.

இத்தீர்வு யோசனைகளைப் பார்க்கும் போது ஜே.ஆரால் முன்பு வழங்கப்பட்ட மாவட்டசபைகளை விட ஒரு படி மேலேயும் பின்பு வழங்கப்பட்டு செயலிழக்கச் செய்யப் பட்ட மாகாணசபைக்குப் பல படிகள் கீழாகவும் இருப்பதைக் காண முடிகின்றது. அப்படியானால் இந்தத் தீர்வு யோசனைகள் முன்பு வரைந்து கைவிடப் பட்ட வகைகளில் ஒன்றே தவிர வேறெதுவும் இல்லை. இது அடிப்படையில் தமிழ் மக்களை இந் நாட்டு மக்களாகக் கருதாது அவர்களைத் தமது இறுக்கிய கரங்களுக்குள் என்றும் வைத்திருக்க வேண்டும் என்ற பேரினவாத ஒடுக்குமுறையின் உள்ளக் கிடக்கையேயாகும்.



**வடக்கு கிழக்கு இணைந்த மண்ணில் பூரண சுயாட்சியே தமிழ் - முஸ்லீம் மக்களின் அடிப்படை அபிலாஷையாகும். அதனை தற்போதைய தீர்வுத் திட்டம் நிராகரித்துள்ளது.**

தமிழ்த் தேசிய இனத்திற்கு இன்றைய பேரினவாத ஒடுக்கு முறையில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்பதே அடிப்படையான தேவையாக உள்ளது. அத்தகைய விடுதலை வேட்கையை கொடிய ராணுவ ஒடுக்குமுறைகளால் ஒருபோதும் நசுக்கிவிட முடியாது. பணம், படை, அதிகாரம் என்பனவற்றுக்கும் மேலால் அந்நியப் படைஉதவி பெற்றாலும் கூட விடுதலை வேட்கை கொண்ட மக்களது உணர்வுகளை அழித்தொழிக்க முடியாது என்பதே வரலாறு தரும் பாடமாகும்.

எனவே அந்த வழியை மென்மேலும் நாடிச் சென்று அழிவுகளைத் தொடர்வதைத் தவிர்த்து ஆக்கபூர்வமான அரசியல் தீர்வு ஒன்றுக்கு வருவதே சிங்கள மக்களுக்கும் நாட்டின் அனைத்து மக்களுக்கும் தேவையானது. தமிழ்த் தேசிய இனத்தை இந் நாட்டின் தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளாத வரை அவர்களது அபிலாஷைகளைப் புரிந்து கொள்ள இயலாது. அதே போன்று அவர்களது வரலாற்றுப் பாரம் பரிய பிரதேசங்களை வடக்கு கிழக்கு என அடையாளம் கண்டு கொள்ள மறுப்பதாலும் தீர்வு தேடிக் கொள்ள முடியாது. அடுத்து அவர்களது பிரதேசத்தில் அவர்கள் தமது சொந்தத் தலைவிதியைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டே தீர வேண்டும்.

இவற்றை பிரிவினை என்ற அர்த்தத்தில் அன்றி பூரண அதிகாரப் பகிர்வுடனான பூரண சுயாட்சியை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் தீர்வாகக் கொண்டு வர முடியும். குறிப்பிட்டுக் கூறுவதனால் நாட்டின் பாதுகாப்பு, வெளிவிவகாரம், தொலை தொடர்பு, ஆகியன உட்பட மேலும் அதிமுக்கியம் என வரையறுக்கப்படும் ஒரிரு விடயங்களை மட்டும் மத்தியின் அதிகாரங்களாகக் கொண்டு ஏனைய அனைத்து விடயங்களையும் வடக்கு கிழக்கு மக்களே சுயமாகத் தீர்மானித்து வழி நடக்கக் கூடியதான ஒரு சுயாட்சியே தேசிய இனப் பிரச்சினைக்கு குறைந்த பட்சத் தீர்வாக அமைய முடியும்.

"இத்தகைய பூரண சுயாட்சியின் கீழ் வடக்கு கிழக்கு நிலைப்படுத்தப்படும் போது அங்கு நீண்ட காலப் பகுதியில் வாழ்ந்து வரும் முஸ்லீம் மக்களது மத கலாச்சார தனித்துவங்களைப் பாதுகாத்து தமிழ் மக்களுடன் தொடர்ந்து ஐக்கியப்பட்டு வாழ்வதற்கு உரிய வகையில் சுயாட்சி உள்ளமைப்புகள் உறுதியான அதிகாரங்கள், மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறே பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் உள் நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டு குடியேற்றப் பட்ட சாதாரண சிங்கள மக்களின் இருப்புக்கு உரிய உத்தரவாதமாக அமையக் கூடியவாறான சுயாட்சி உள்ளமைப்பு தோற்று விக்கப்பட்டு அது சுயாட்சியுடன் இணைந்த ஒன்றாக அமையப் பெறலாம். அதன் மூலம் அப்பிரதேச சிங்கள மக்கள் தாம் வாழுகின்ற பிரதேசத்தின் பெரும்பான்மையான தமிழ் முஸ்லீம் மக்களுடன் இணைந்து நிற்பதற்கும் வழி ஏற்படக் கூடிய சூழல் ஏற்படும். இவ்வாறு சிங்கள மக்களும் முஸ்லீம் மக்களும் தமிழர்களும் வடக்கு கிழக்கில் இணைந்து வாழும் ஒரு சூழலைப் பேரினவாத சக்திகள் விரும்ப மாட்டாது என்பது உண்மையே ஆயினும் எதிர்காலத்தில் அத்தகைய ஒரு வாழ்நிலைக்கு வந்தே ஆக வேண்டும்.

மேலும் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு யோசனைகளில் வடக்கு கிழக்கிற்கான ஒரு இடைக்கால சபையை ஜனாதிபதி நியமனத்தின் மூலம் தோற்றுவிப்பது என்பது பிரச்சினையை மேலும் வளர்த்துச் செல்வதற்கே உதவக் கூடியதாகும். ஜனாதிபதியும் அரசாங்கமும் தமக்கு விரும்பியவர்கள் மூலம் இச்சபையை உருவாக்கி வடக்கு கிழக்கில் ஒரு பொம்மை நிர்வாகத்தை ஏற்படுத்தி ஊர் உலகத்திற்கு ஒரு காட்சி காட்ட முற்படும் முயற்சியே இதுவாகும். ஏற்கனவே மாகாண சபையை முடக்கியதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டது. இப்போது இடைக்கால சபை என்பதன் ஊடாக ஐந்து ஆண்டுகளுக்கு மேலும் ஜனநாயக உரிமைகள் நிராகரிக்கப்படவே வாய்ப்பு ஏற்படுத்தப்படும். இது பாரிய எதிர் விளைவுகளைத் தரக் கூடிய ஒன்றாகும்.

இவை அனைத்தின் மூலமும் புலிகள் இயக்கத்தை ஓரம் கட்டி ஒழித்து விடலாம் என நம்பப்படுகிறது. அதற்கு இந்தியா அமெரிக்கா ஆகியவற்றின் ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது போன்றே எண்ண வேண்டியுள்ளது.

அரசாங்கத்தினது இத்தகைய விபரீத எண்ணத்தின் மூலம் நாடு மேலும் யுத்தத்தினுள் அழிந்து போகவே செய்யும். இப்படியான எண்ணங்களின் ஊடான வழிமுறைகளால் அமெரிக்காவின் பூகோள மயமாக்கலுக்கும் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்திற்கும் மென்மேலும் களமமைக்க முடியுமே தவிர தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாது.

தற்போது முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளில் முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு என்பதை விட தமிழ் முஸ்லீம் வேறுபாட்டைப் பயன்படுத்தி மோதல் களுக்கு வழிவகுக்க கூடிய அம்சங்களை அடையாளம் காணக் கூடியதாக உள்ளது.

அவ்வாறு மலையக மக்களின் தனித்துவம் தன்னடையாளங்களைப் பாதுகாத்து நிற்கக் கூடிய எந்த ஒரு அம்சமும் தீர்வு யோசனைகளில் காணப்படவில்லை. இது அம் மக்களைப்பற்றிய பேரினவாத ஆளும் வர்க்க நிலைப்பாட்டின் வக்கிரத்தன்மையையும் அவர்களுக்கு என்ன உரிமை வேண்டிக் கிடக்கிறது என்ற அகங்காரத் தொனியையும் வெளிப்படுத்துகின்றது.


பேரினவாத ஆளும் வர்க்க அதிகார சக்திகள் இதுவரையான காலம் முழுவதிலும் இனங்களைத் துருவப்படுத்திக் கொள்வதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தேசிய வாழ்வில் இருந்து தமிழ் மக்களை தூர அந்நியப்படுத்திய அதே வேளை தமிழர்களின் நியாமான உரிமைகளுக்கு பிரிவினை தீவிரவாதம் பயங்கரவாதம் போன்ற தோற்றப்பாடுகளையே வழங்கி வந்துள்ளனர். இதனால் இன்று கணிசமான சிங்கள மக்கள் ஏமாற்றப்பட்டு திசை திருப்பப்பட்டுள்ளனர். ஆனால் இந் நிலை நீண்ட நாட்களுக்கு நீடிக்க மாட்டாது. தமிழ் மக்களைப் போன்று சிங்கள மக்களும் தம்மைப் பிணைத்திருக்கும் உண்மை யான வர்க்க ஒடுக்குமுறை என்ற அடிமை விலங்கைக் உற்று நோக்கும் போது நிச்சயம் அவர்கள் அதற்கு எதிராக எழுந்து போராடவே செய்வர். அப்போது தான் அவர்கள் தமிழ் மக்களுடைய போராட்டத்தின் நியாயப்பாட்டையும் உணர்ந்து ஏற்றுக் கொள்வார்கள். சிறிது காலம் சென்றாலும் இது இடம் பெறும். அதேவேளை தமிழ் மக்கள் தமது பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களுடனும் வர்க்கம் சாதி, பால் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களுடனும் ஒன்றிணைத்து முன்னெடுத்தல் வேண்டும். இது வரலாற்றின் தேவையை நிறைவு செய்வதாக இருக்கும். அதற்கான முன் முயற்சிகள் அவசியம்.


அ. பூபதி


## விற்பனையாகிறது

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடுகள்




வசந்தம் பிறைவேட் லிமிற்டட்
S-44, 3வது மாடி,
கொ.ம.ச.க. தொகுதி,
கொழும்பு-11.

நன்றி - நூலகத்திட்டம்



# மாண்ட கிளர்ச்சியாளன் மீண்டு வந்த அதிசயம்

## அண்ணன் காட்டிய வழி (3)

இமயவரம்பன்

சட்டக் கல்லூரியில் படித்த போது தான் ஒரு இடதுசாரியாக இருந்ததாக அமிர்தலிங்கம் பல இடங்களில் சொல்லியிருக்கிறார். ஏன், ஜே. ஆர். ஜயவர்தன கூட இளமைக் காலத்தில் தான் ஒரு மாக்ஸியவாதியாக இருந்ததாகக் கூறி இருக்கிறார். சிலருக்கு அரசியலில் மறதியை விடக் கற்பனை அதிகம். தமிழரசுக் கட்சிக்குள் இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கத்தில் முக்கிய பொறுப்பில் இருந்தவர் முன்னாள் உடுவில் பா.உ. காலஞ்சென்ற தர்மலிங்கம். அவரை ஒரு இடதுசாரி என்று யாரும் சொல்வதில்லை. சோவியத் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர்கள் பலருடைய இடதுசாரித்தன்மையே ஜமிச்சமான போது இவர்களை ஏன் பழி சொல்ல வேண்டும்! என்றாலும், அமிர்தலிங்கம் யூ.என்.பி. பிரமுகர்களையும் மிஞ்சிய ஒரு வலதுசாரியாகவே 1965 - 1969 கால இடைவெளியில் நடந்து கொண்டார். 1965 ல் யூ.என்.பியுடன் தமிழரசுத் தலைமையால் ஏற்படுத்தப்பட்ட உறவு ஒரு உண்மையான வர்க்க உறவு என்பதற்கு நல்ல உதாரணமாகவே அமிர்தலிங்கத்தின் நடத்தை அமைந்தது.

மேற்குறிப்பிட்டகால இடைவெளியில் சர்வதேச அளவில் அனைவரது கவனத்தையும் ஈர்த்த விடயம் வியற்னாம் யுத்தம், தேசிய அரசியலில் ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது சாதியத்துக்கு எதிரான ஆயுத மேந்திய போராட்டம், இரண்டையுமே எதிர்த்த பெருமை மட்டுமன்றி இரண்டையுமே இணைத்துப் பேசிய பெருமையும் அமிர்தலிங்கத்துக்குரியது. சாதியத்துக்கு எதிரான போராட்டத்தைக் கண்டித்து யாழ்ப்பாணத்தை வியற்னாமாக்கப் போகிறார்கள் என்று அவர் மாக்ஸிய லெனினிச வாதிகளைத் தாக்கியதன் மூலம் சர்வதேசப் பிற்போக்கை உள்நாட்டுப் பிற்போக்கிலிருந்து பிரிக்க முடியாது என்பதையும் உணர்த்தினார்.

மேற்கண்டவிதமாகத் தமிழரசுக் கட்சியின் படு வேகமான சீரழிவின் முழுமையான பிரதிநிதியாகவும் அமிர்தலிங்கம் விளங்கினார். அதன் விளைவாக அவருடைய வெகுஜன அரசியலும் மக்களுடனான உறவும் மாற்றங்கண்டன. 1956 தமிழரசுக் கட்சிக்கு வடக்கிலும் கிழக்கிலும் வளர்ந்து வந்த பெரிய செல்வாக்கின் காரணமாகத் தமிழரசுக் கட்சியை அசைக்க முடியாது என்ற மயக்கம் பல தமிழரசுக் கட்சியினரிடம் இருந்து போல அவரிடமும் இருந்தது. இதன் விளைவை அவர் 1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அனுபவித்தார்.

1970ம் ஆண்டுத் தேர்தலில் அமிர்தலிங்கம் பெற்ற தோல்வி அவருக்குத் தனிப்பட்ட முறையிலும் அரசியல் ரீதியாகவும் மக்கள் புகட்டிய பெரிய பாடமும் ஆகும். அந்த அதிர்ச்சி அமிர்தலிங்கத்தின் அரசியலையே மாற்றியது. கட்சித் தலைமையில் தன்னை மீண்டும் நிலைநாட்டுவது அவருடைய பெருந் தேவையாகியது. துடிப்பான இளம் தலைமுறைத் தலைவர்களுள் ஒருவராக இருந்து திமிர்த்தனமான மேட்டுக்குடித் தலைவராகத் தன்னை வளர்த்துக்கொண்ட அமிர்தலிங்கத்திற்கு இப்போது தீவிரவாதமே மேல் நோக்கிய பாய்ச்சலுக்கான ஒரே வழியாகத் தெரிந்தது.


1968 அளவிலேயே யூ.என்.பியுடனான உறவின் மூலம் பயனுள்ள எதுவுமே விளையாது என்று கண்ட இளைஞர்கள் நடுவே அதிருப்பதியின் குரல்கள் எழத் தொடங்கிவிட்டன. தமிழ் மாணவர் பேரவை இப்படிப்பட்ட கிளர்ச்சிக் குரல்களின் ஒரு களமாக இருந்தது. இதைவிட 1968ல் வடக்கில் சாதியத்திற்கெதிரான ஆயுதமேந்திய போராட்டத்தின் வெற்றிகள் இளைஞர்கள் நடுவே இடதுசாரிச் சிந்தனை மீதான கவர்ச்சியை வளர்த்திருந்தது. இதன் காரணமாக இடதுசாரிகளது வளர்ச்சியைத் தடுத்து நிறுத்துவது தமிழரசுக் கட்சியின் அத்தியாவசியத் தேவையாயிற்று. மொழிப் பிரச்சினையின் காரணமாகத் தமிழரசுக் கட்சி வென்ற ஆதரவைச் சமூகப் பிரச்சினைகளின் காரணமாக இழக்க அதன் தலைமை விரும்ப வில்லை. அதே வேளை 1965க்குப் பின் யூ.என்.பியுடன் ஏற்பட்ட உறுதியான வர்க்க உறவு காரணமாக இடதுசாரிகளை எதிர்கொள்வதில் யூ.என்.பி.யின் கொள்கை வழியிலேயே மேலும் மேலும் நடக்கும் நிர்ப்பந்தத்துக்கும் அத் தலைமை உள்ளானது. அதை விட, கட்சியின் முக்கியஸ்தர்கட்கும் பெரிய முதலாளிகட்கும் ஏற்பட்ட உறவுகளும் தேர்தலில் அவர்களது நிதி ஆதரவின் தேவையும் காரணமாக யூ.என்.பி ஆட்சி மூலம் சில காரியங்களைச் செய்விக்கும் படி தமிழரசுத் தலைமையை நெருக்கியது. இந்த நாட்டை ஆள்வது யார் என்று தீர்மானிக்கிற சக்தியாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட கட்சி யாருடன் சேர்ந்து ஆளுவது என்று முடிவெடுக்கப் போய் வேறு யாருடனும் சேர முடியாத நிலையிலேயே 1970ல் வந்த பொதுத் தேர்தலை எதிர் நோக்கியது. 1970ல் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த வாக்குக்களின் விகிதம் 1965ல் கிடைத்துடன் ஒப்பிட்டால் ஒரு சரிவு என்பதை யாரும் மறுக்க முடியாது. யூ.என்.பியின் படு தோல்வி தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றப் பேரம் பேசுவதற்கும் வசதியில்லாத ஒரு நிலைமையை உண்டாக்கி விட்டது.

தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்ட இந்த அவலத்தின் போது அதற்குக் கைகொடுத்தது ஸ்ரீ.ல.சு. கட்சி தலைமையில் சமசமாஜக் கட்சியும் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியும் பங்கு பற்றிய அரசாங்கத்தின் பேரினவாதப் போக்காகும். இன்று எப்படி விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் இடையே வித்தியாசம் காண முடியாமல் ஒன்றை எதிர்க்கிற நோக்கில் மற்றதை அழிக்கிற போர் நடக்கிறது என்று காணுகிறோம். அது போலவே தமிழரசுக் கட்சித் தலைவர்களை மட்டம் தட்டுகிற முயற்சியில் தமிழ் மக்களுடைய நலன்களுக்கு விரோதமாக அரசாங்கம் நடந்து கொண்டது.

ஜி.சி.ஈ. (ஏ.எல்.) பரீட்சை முடிவுகளில் 1970ம் ஆண்டின் பேராதனையில் மட்டுமே இருந்த பொறியியல் பீடத்துக்குச் சேர தமிழ் மாணவர்கள் அதிகளவில் தகுதி பெற்றதன் விளைவாகப் புகுத்தப்பட்ட தரப்படுத்தல் மிகவும் தவறானது என்பதில் எந்த நேர்மையான இடதுசாரிக்கும் மறு பேச்சுக்கு இடமில்லை. யாழப்பாணத்தில் இத்தரப்படுத்தல் கடுமையான எதிர்ப்புணர்வை எழுப்பியது. தரப்படுத்தலை எதிர்த்து மும்முரமாக நின்றவர்களில் மாக்ஸிய லெனினிச கம்யூனிஸ்டுகள் முக்கியமானவர்கள். மாணவர்கள் நடுவே அப்போது கல்வி அமைச்சராக இருந்த பதியுதீன் முகம்மது மீது இருந்த கோபத்தை முஸ்லீம்கட்கு விரோதமானதாகத் திருப்புகிற முயற்சிகளைத் தடுப்பதில் அவர்களது பங்கு முக்கியமானது. அதே வேளை நீரில் அமிழ்கிறவனுக்குப் பற்றுவதற்கு அகப்பட்ட ஒன்றாக இந்தப்பிரச்சனை அமிர்தலிங்கத்துக்குக் கை கொடுத்தது.

தமிழரசுக் கட்சி தரப்படுத்தலுக்கு எதிராகக் கூச்சல் போட்ட போதும் யூ.என்.பி அதை எதிர்க்க முன்வரவில்லை. மாக்ஸிய வேடம் போட்ட ஜே.வி.பி அதைக் கண்டுங்காணாதது போல இருந்தது. பாராளுமன்ற இடது சாரிகள் மௌனம் காத்தார்கள். ஸ்ரீ ல. சு. கட்சியின் நிழலில் குளிர்காய்ந்த சில தீவிர இடதுசாரிகளும் பிரச்சினையைத் தட்டிக்கழிப்பதில் கவனம் காட்டினார்கள். தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை இந்த அநீதிக்கு எதிராக ஒரு வெகுசனப் போராட்டத்தை நடத்த அதன் எம்.பி.மார் ஆயத்தமாக இல்லை. அவர்களுக்கு அந்த ஆற்றல் இல்லை என்பது ஒருபுறம் இருக்க அதன் பின் விளைவுகள் பற்றியும் அவர்கள் அஞ்சினார்கள். ஏனெனில் வெகுசன இயக்கங்கள் ஒரு பிரச்சனையுடன் தொடங்கி அங்கேயே நிற்கிற பழக்கமுடையவையல்ல என்று அவர்கள் அறிவார்கள். எனவே இந்த எதிர்ப்பு வரம்பு மீறாது அவர்கள் கவனித்துக் கொண்டார்கள்.

1974ல் மாவட்ட அடிப்படையிலான அனுமதி என்ற யோசனை மூலம் தமிழ் மக்களது ஏகோபித்த எதிர்ப்பைத் திசைதிருப்பும் அருமையான ஆலோசனையை வழங்கியவர் பீற்றர் கெனமன் ஆவர். இதன் மூலம் மொத்தமாக அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர் தொகை பழைய தரப்படுத்தல் முறையில் இருந்ததைவிடச் சிறிது அதிகமானது. அதில் யாழ்ப்பாணத்திற்கு வெளியிலான தமிழரின் விகிதாசாரம் அதிகரித்ததுடன் கிளிநொச்சி தனி மாவட்டமாகும் சூழ்நிலையும் ஏற்பட்டதை நாம் அறிவோம். அது போக, கட்டுப்பத்தை தொழில்நுட்பக் கல்லூரிக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து



வழங்கியதன் மூலம் ஒட்டுமொத்தமாக அனுமதிக்கப்பட்ட பொறியியல் பீட மாணவர் தொகை இருமடங்கானதால் நெருக்கடியின் தாக்கம் கணிசமாகத் தணிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் தரப்படுத்தல் ஏற்படுத்திய கசப்புணர்வு மறையவில்லை. அதனால் உடனடியாகப் பாதிக்கபட்ட மாணவர்களின் தொகை வருடத்துக்கு நூற்றுக்கும் குறைவு என்பதை விட அது ஓரளவு வசதியுள்ள இடை நடுத்தர வர்க்கத்தினரையே பாதித்தது என்பதை விட முக்கியமாக அதன் இனவாத நோக்கும் அதன் தீர்க்க ரீதியான துணை விளைவுகளும் பற்றிய கவலையும் கோப உணர்வும் தமிழ் இளைஞர்கள் நடுவே தோன்றியதில் அதிசயமில்லை. இதன் நடுவிலிருந்து உருவாகக் கூடிய தீவிரவாதப் போக்குக்களில் தனது எதிர்கால எழுச்சியைக் கண்ட அமிர்தலிங்கம் தன்னைத் தமிழ்த் தீவிரவாத இளைஞர்களுக்கு நெருக்கமான ஒருவராகக் காட்டிக் கொண்டார்.

1972ம் ஆண்டு இலங்கையைக் குடியரசாகப் பிரகடனம் செய்த புதிய அரசியல் யாப்பை வரைவதில் அரசாங்கம் தமிழரசுக் கட்சியை அசட்டையுடன் நடத்தியது உண்மை என்றால், தமது பாராளுமன்ற அரசியல் வலிமையை உணர்ந்து இந்தப் பிரச்சனையில் அரசாங்கத்தின் தவறான போக்கை மக்கள் நடுவே அம்பலப்படுத்துவதில் தமிழரசுக் கட்சி போதிய திறமையுடன் செயற்பட்டதாகவும் கூற முடியாது. 1972 அரசியல் யாப்பின் வரைவில் பங்கு பற்றாது விலகுவதில் தமிழரசுக் கட்சி காட்டிய அவரசத்தை 1978ல் யூ.என்.பி உண்டாக்கிய அரசியல் யாப்புத் தொடர்பாகவும் அடுத்தடுத்து வந்து சட்டத் திருத்தங்கள் தொடர்பாகவும் காட்டிய நிதானத்துடன் ஒப்பிடுவது ஒரு பயனுள்ள முயற்சியாக இருக்கும்.

எப்படியிருந்தாலும் தரப்படுத்தலைக் கடுமையாக விமர்சித்த எவருமே 1972ம் ஆண்டு அரசியல் யாப்பின் சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு எதிரான அம்சங்களை விமர்சிக்கத் தவறவில்லை. முன்னைய நிகழ்வில் மௌனம் காத்தவர்கள் பின்னைய நிகழ்விலும் மௌனம் காத்தார்கள். தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை 1972ம் ஆண்டு அரசியல் யாப்பைப் பேச்சுவார்த்தைகள் மூலம் மாற்றுகிற நம்பிக்கையும் இருக்க வில்லை. அதை எதிர்த்துப் போராடுகிற வலிமையும் இருக்கவில்லை. ஆனால் அதேவேளை அரசியல் யாப்பை எதிர்த்து ஏதாவது செய்தாக வேண்டிய நிர்ப்பதந்தமும் வலுவாக இருந்தது.

விளைவு தமிழ் இளைஞர்கள் முன்னால் தங்களைச் சிறைக்குப் போக அஞ்சாத வீரர்களாகவும் தமிழினத்தின் காவலர்களாகவும் காட்டுகிற விதமான ஒரு நாடகம் அரங்கேறியது. அரசியல் யாப்பின் பிரதிக்குத் தீயிடப்பட்டது. இந்தச் சடங்கு ஆபத்தில்லாதது என்று தமிழரசுத் தலைமையின் சட்ட மூளைகளுக்குத் தெரியும். ஏனெனில் அது தண்டனைக்குரிய குற்றமாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை. உயிருக்கோ சொத்துக்கோ சம்பாத்தியத்திற்கோ சேதமில்லாமல் தியாகம் செய்வதில் தமிழரசுக் கட்சியின் காந்தியப் பாரம்பரியம் எப்போதோ தேர்ச்சி பெற்றிருந்தது.

இந்தக் குட்டு என்றோ வெளிச்சமாகிறது தான் என்றாலும் அது அம்பலமாவதற்கு முன்னாலேயே தடுமாறும் தமிழரசுக் கட்சிக்கும் பாராளுமன்றத் தளமிழந்த அதன் தளபதிக்கும் கைகொடுப்பதற்கு அரசாங்கம் தவறவில்லை. இதற்கான வாய்ப்புக்கள் 1974ல் தமிழராய்ச்சி மாநாட்டை எங்கே நடத்துவது என்ற விவாதத்தினூடு 1973ல் ஏற்பட்டு விட்டன.

தமிழாராச்சி மாநாட்டை எப்படி அரசியல் கேளிக்கையாக மாற்றலாம் என்று தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சி ஏற்கெனவே வழிகாட்டியிருந்தது. அதே வழியை இலங்கையிலும் பின்பற்றத் தமிழரசுக்கட்சி தயங்கவில்லை. அதைத் தவறாகக் கையாள அரசாங்கமும் தவறவில்லை.

❖❖❖

# திராவிட இயக்கங்களின் திசைவழி!

தமிழகத்தில் பெரியார் என அழைக்கப்படும் ஈ.வே.ரா. தொடக்கிய சமூக சீர்திருத்த இயக்கம் தான் திராவிடர் இயக்கமாகும். பார்ப்பனிய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதி தீண்டாமை ஒழிப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு மற்றும் திராவிடப் பாரம்பரியம் போன்றவைகளே ஈ.வே.ரா. முன்னுறுத்திய கொள்கைகள். சமூக அதிர்வு தரக் கூடிய முற்போக்கு கொள்கைகளை ஆரம்பகால திராவிடர் இயக்கம் கொண்டிருந்தது. ஆனால் தேர்தல் அரசியலில் அண்ணாத்துரையும் அவர் தம் தம்பிகளும் இறங்கியதுடன் ஈ.வே.ரா.வுக்கும் அவரது கொள்கைகளுக்கும் தமது புறமுதுகுகளைக் காட்ட ஆரம்பித்து விட்டனர். கடந்த 35 வருட தேர்தல் அரசியலிலும் மாநில அதிகாரத்திலும் ஊறித் திளைத்து ஆளும் வர்க்க சக்கதிகளாகவே அண்ணாவின் தம்பி மார் மாறிக் கொண்டனர்.

தற்போது 75 வயதையடைந்திருக்கும் கருணாநிதி தி.மு.க. வைத் தனது குடும்பமாகவே முன்னெடுத்து நிற்கிறார். அவரது இறுதிக் குறிக்கோள் தனது மகன் க. ஸ்டாலினை தனக்குப் பின் முதல்வர் ஆக்குவதேயாகும். மேலும் தமிழகத்தை நிலவுடமை முதலாளித்துவப் பிடிகளில் இருந்து நழுவ விடாது தமது ஆட்சியின் மூலம் அவ் அமைப்புகளைப் பாதுகாத்தும் வருகிறார். திராவிடர் இயக்கத்தின் சாதனை தமிழ் நாட்டில் கம்யூனிஸ்டுக்கள் இடது சாரிகள் வளர்ந்து தலையெடுக்க விடாமல் செய்தது தான் எனப் பெருமை பேசுகிறார் கருணாநிதி. அது உண்மை தான். பார்ப்பனிய இந்துத்துவவாதிகளின் வளர்ச்சிக்கு உதவி வரும் இவர்கள் கம்யூனிச எதிர்ப்புக் காட்டுவது இயல்பான வர்க்க நிலைப்பாடேயாகும். கருணாநிதி, கோபாலசாமி, ஜெயலலிதா போன்ற தலைவர்கள் தமிழ் நாட்டிற்கு பாரதிய ஜனதாவையும் அதன் இந்துத்துவ வெறியையும் கொண்டு வந்து சேர்த்த பெருமைக்குரியவர்களாகி நிற்கின்றனர். ஆளும் அதிகார வர்க்கத் தேவைக்காக மத்தியில் எந்தப் பிசாசுடனும் சேருவதற்கும் இவர்கள் தயங்குவதில்லை. மாநிலத்தில் ஆட்சியும் மத்தியில் பதவிகளும் என்பதே இவர்களது குறிக்கோள். இன்று இவர்களிடம் திராவிட இயக்கத்தின் ஆரம்பகாலக் கொள்கை கோட்பாடுகளை எதிர்பார்க்க இயலாது. ஆனால் இன்னும் மக்களை ஏமாற்றுவதற்காக திராவிட இயக்க முழக்கங்களையே பயன் படுத்துகின்றனர். தமிழக மக்கள் இவர்களது ஆளும் வர்க்க ஏமாற்றுக்களைப் புரிந்து கொள்ளும் வரை அவர்களது அரசியல் ஆதிக்கம் நீடிக்கவே செய்யும்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஏ.ஜே. வில்சனின் மறைக்கப்பட்ட பக்கங்கள்

பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் அவர்கள் மே மாத முடிவில் இறந்தது பற்றிப் பல செய்திவிமர்சன ஏடுகளில் குறிப்புகளும் அவருடைய சாதனைகளைப் பற்றிய நயப்புக்களும் வெளியாகி இருக்கின்றன. பேராசிரியர் வில்சன் தமிழ் அறிஞர்கள் எனப்படுவோரிடையே முக்கியமான ஒருவர். அவருடைய முக்கியத்துவம் வெறுமனே அவர் தமிழ் அறிஞர் என்பது மாத்திரமில்லை. அவர் ஒரு வெறும் அரசியல் விஞ்ஞானியாக அரசியலை எட்ட நின்று பார்த்த ஒருவர் அல்ல. அரசியலில் அவர் குறுக்கிட்டுள்ளார். அதற்காக அவர் போற்றப்பட்டு இருக்கிறார். 'தமிழரசுத் தந்தை' எஸ். ஜே.வி. செல்வநாயகத்தின் மகளை மணந்தவ' என்பதும் அவருடைய தகுதிகளில் ஒன்றாகக் கூறப்படுகிறது. அவருடைய சில நூல்கள் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினை பற்றித் தெளிவாக விளக்குவதாக சிலாகித்துப் பேசப்படுகிறது. ஒரு நல்ல ஆய்வறிவாளருக்குரிய நிதானமான நோக்குடனும் பார்வைத் தெளிவுடனும் விடயங்களை அவர் அணுகியிருப்பதாகவும் கூறப்படுகிறது. அவர் தனது ஆய்வுகள் மூலம் தமிழினத்துக்குச் சேவையாற்றியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழ் அறிஞர்கள் இருப்பது தமிழர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய விடயம். அது சிறிது பெருமைக்குரிய விடயமும் ஆகும். ஆனாலும் ஒருவருடைய அறிவும் திறமையும் எதற்குப் பயன்படுகிறது, எவருக்குப் பயன்படுகிறது, எப்படிப் பயன்படுகிறது என்பது அதிலும் முக்கியமானது. வில்சனுடைய அரசியல் பார்வை தமிழ்த் தேசிய முதலாளித்துவப் பார்வை என்று சிலர் கூறலாம். அப்படியே இருந்தாலும் அதில் தமிழையும் தேசியத்தையும் விட முதலாளித்துவம் முக்கியமானது.

வில்சன் தமிழ்த் தேசிய இனப் பிரச்சனை பற்றித் தொடர்ச்சியாகக் கவனங் காட்டினார் என்று சிலர் சொல்லலாம். என்றாலும் அந்த அக்கறை வெளிவெளியாகக் காட்டப்பட்ட காலம் பிரச்சினை முற்றி ஒரு நெருக்கடியாகிய காலமாகும். 1972 அளவில் கனடாவில் குடியேறிய வில்சனை விட இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை பற்றிக் கரிசனை காட்டிய அந்நிய அறிஞர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். அவரிடம் தமிழ்த் தேசியவாத அரசியல் இருந்தது என்றால் அதை யாரும் அடையாளம் காணாத விதமாக அவர் கவனித்துக் கொண்டார். 1983க்குப் பிறகு அவருடைய சில கருத்துக்கள் சிங்களப் பேரினவாதிகள் நடுவே அவருடைய 'நடுநிலை' பற்றிக் கொஞ்சம் கவலைகளை உண்டாக்கியது உண்மை. என்றாலும் வில்சனிடம் இப்படியான அறிஞர்களுக்குரிய 'நடுநிலை' தேசிய இனப்பிரச்சினையில் இருந்த அளவுக்கு வேறு விடயங்களில் இருந்ததா என்பது பற்றி நாம் கவனிக்க வேண்டும்.

வில்சன் வெளிவெளியான வலதுசாரி, ஏகாதிபத்தியச் சார்பானவர், கூசாத கம்யூனிச் விரோதி, முழுமையான இடதுசாரி எதிர்ப்பாளர். யூ.என்.பியுடன் அவருடைய உறவு நெருக்கமானது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அவர் பணியாற்றிய காலத்தில் அவருக்கு மிக நெருக்கமாக இருந்தவர்களில் யூ.என்.பி. ஆதரவுச் சிங்களப் பேரினவாதிகள் முக்கியமானவர்கள். வில்சனின் தமிழ்த் தேசியவாதம் பற்றி இன்று புலனாய்ந்து பாராட்டுகிறவர்களுக்கு இவை பற்றி நன்கு தெரிந்து இருக்க வேண்டும். அவருடைய யூ.என்.பி. சார்பு அரசியலுக்கு அவருடைய தமிழ்த் தேசியவாத உணர்வு நிச்சயமாகக் கீழ்ப்படிந்தே இருந்தது.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜயவர்த்தனவின் தலைமை கொண்டு வந்த சர்வாதிகார அரசியல் முறையையும் யூ.என்.பி. அதிகாரத்தை லேசில் கவிழ்க்க முடியாத படி உண்டாக்கின விகிதாசார தேர்தல் முறையையும் போற்றியவர் வில்சன்.



1972ல் ஸ்ரீ.ல.சு கட்சியின் அரசியல் யாப்பை ஜனாநாயகமற்றது என்று கண்டித்த பேராசிரியர் வில்சனுக்கு 1978ல் ஜே. ஆர். ஜயவர்த்தனவின் 'ஜனநாயகம்' விருப்பமானதாக இருந்தது. இந்த ஜனநாயகத்தின் பல்வேறு அரசியல் உள்நோக்கங்களை அறியாத அரசியல் பச்சைக் குழந்தை ஒரு அரசியல் விஞ்ஞானப் பேராசிரியராக இங்கே பேராதனையிலும் கனடாவில் நியூ புருன்ஸ்விக்கிலும் கடமை யாற்றி இருக்க முடியாது. உண்மையில் ஜே.ஆர் ஜயவர்தனவுடைய சர்வாதிகார நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட அரசியல் யாப்புக்குப் பேராசிரியர் வில்சனுடைய ஆதரவு மட்டும் இருக்கவில்லை. அவருடைய ஆசியும் இருந்தது. அதை விட அவருடைய ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

ஆனானப்பட்ட ஜே.ஆர் ஜயவர்த்தனவுக்கு ஆலோசனை வழங்கவும் அவருக்கு வசதியான அரசியல் தரகுவேலை செய்யவும் பேராசிரியர் வில்சன் மிகவும் பயன்பட்டார். மாவட்ட சபை என்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக ஜே.ஆர். ஜயவர்த்தன எடுத்த நடவடிக்கை என்று அமிர்தலிங்கத்துக்குக் கூட விளங்கியிருந்தது. பாராளு மன்றத்தில் அதை எதிர்ப்பது என்ற முடிவுடன் கொழும்புக்கு வந்த அமிர்தலிங்கத்தின் மனதை மாற்றிய பெருமை பேராசிரியர் வில்சனையே சாரும். இதன் மூலம் மு. திருச் செல்வத்தையும் நீலன் திருச்செல்வத்தையும் மிஞ்சிய அரசியல் தரகராக பேராசிரியர் வில்சன் விளங்கினார் என்றால் மிகையாகாது. இது அவருடைய சாதனைப் பட்டியலில் கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டிய விடயம்.

ஜே. ஆர். ஜயவர்த்தனவால் ஆலோசனை கேட்டு அடிக்கடி தொலைபேசி மூலம் வில்சன் அணுகப்பட்டது பற்றியும் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டது பற்றியும் சிலாகித்துப் பேசப்பட்டிருக்கிறது. இவ் விதமான காரியத்தை ஒரு பேராசிரியரும் தமிழரசுத் தந்தையின் மருமகனுமில்லாத ஒருவர் செய்திருந்தால் அதைப்பற்றிய கருத்துக்கள் வேறு விதமாக இருந்திருக்கலாம். 'தமிழரசுத் தந்தையுடைய அரசியலுக்கும் அவருடைய மருமகனுடைய அரசியலுக்குமிடையே பெரிய முரண்பாடுகள் இருப்பதாகச் சிலர் நினைக்கலாம். கவனமாக ஆராய்ந்தால் அடிப்படையில் இரண்டு பேரும் ஒரே வகையானவர்கள் என்பது விளங்கும்.

வில்சனுடைய அரசியல் ஆய்வுகளில் ஏகாதிபத்தியமோ அதற்கெதிரான போராட்டமோ சாதியத்தின் கொடுமையோ அதற்கு எதிரான போராட்டமோ எந்த விதக் கணிப்பையும் பெற்றதாகத் தெரியாது. இடதுசாரிகள் பற்றிய கண்டனங்கள் எல்லாம் சந்தர்ப்பவாத பாராளுமன்ற இடதுசாரிகளின் நடத்தையை வைத்தே எழுதப்பட்டிருப்பதும் முக்கியமானது. ஜே.வி.பி யுடைய 1971 ஏப்ரல் கிளர்ச்சி பற்றியும் 1987-89 கிளர்ச்சி பற்றியும் அவருடைய பார்வை யூ.என்.பியினதும் தமிழரசுக் கட்சியினதும் பார்வையே தான்.

'தமிழரசுத் தந்தை' தமிழ்ப் பேசும் மக்கள் பற்றிப் பேசித் தமிழ்த் தேசிய தரகு முதலாளித்துவங்களது நலன்களையும் ஏகாதிபத்திய நலன்களையும் காக்கப் பணி புரிந்தவர். வில்சன் தன் தமிழ் அடையாளத்தைக் காண்பிக்காமலே நீண்ட காலமாக தரகு முதலாளித்துவ ஏகாதிபத்திய நலன்கட்குச் சேவையாற்றியவர்.

சிங்களப் பேரினவாதப் பிற்போக்குத் தலைவர்களுக்குத் துணைபோய் தமிழ் மக்களை ஏமாற்றி முடிவில் தாமும் ஏமாந்த 'தமிழ்ப் பேரறிஞர்களது' பட்டியல் கொஞ்சம் நீளமானது. அது இன்னும் வளருகிறது. என்றாலும் பேராசிரியர் அதிகம் ஏமாந்ததாகக் கூறுவது கடினமானது. ஏனெனில் யூ. என்.பியின். அரசியல் பற்றியும் ஜே.ஆர். ஜயவர்த்தன வுடைய நோக்கங்களையும் அறிந்தே துணை போனவர் அவர். 'அவரது மாமனார் அளவுக்கு அவர் தமிழ் இனப் பற்றாளர் அல்ல. அவரது தமிழ் அடையாளத்தை 1983 வன்முறையும் அடுத்து வந்த நிகழ்வுகளும் அவருக்குக் காத்திரமாக நினையூட்டியது உண்மை. என்றாலும் 1970 களிலேயே கனேடிய குடிமகனான பேராசிரியரான வில்சனுடைய பிரதான அடையாளம் இன அடையாளமில்லை. அவருடைய் வர்க்க அடையாளமே அவருடைய ஆய்வுகள் எல்லாவற்றின் மேலும் பெரும் ஆதிக்கம் செலுத்தியது. இதை மறந்து அவருடைய் அரசியல் ஆய்வுகளை மதிப்பிடுவது கண்ணைக் கட்டிக் கொண்டு இருட்டு அறையில் இல்லாத பூனையைத் தேடுகிற காரியமே ஆகும்.

மொத்தத்தில் பேராசிரியர் வில்சன் இலங்கையினது முதலாளியத்தின் மிகப் பிற்போக்கான சிந்தனையின் பிரதிநிதியே தான். அந்த விடயத்தில் 'தமிழரசுத் தந்தையை' விட அவர் நேர்மையாகவே நடந்துள்ளார். அவருடைய வர்க்க நலன்களுக்கு உட்பட்டு அவ்வர்க்கத்துக்கு விசுவாசமாகவே இறுதி மூச்சு வரை செயற்பட்டவர் அவர். முதலாளித்துவத்துக்கு தொண்டாற்றும் சான்றோர் நடுவிலும் முதலாளித்துவத்துடன் சமரசம் செய்கிற புலமைப் பாரம்பரியக்காரர்கள் நடுவிலும் அவர் 'புகழுடம்பு' நீண்ட காலத்துக்கு நிலைக்கும் என்று நம்பலாம்.

**வில்சன் வெளிவெளியான வலதுசாரி, ஏகாதிபத்தியச் சார்பானவர், கூசாத கம்யூனிச விரோதி, முழுமையான இடதுசாரி எதிர்ப்பாளர். யூ.என்.பியுடன் அவருடைய உறவு நெருக்கமானது.**

**இந்திரன்.**

# பகிடி வதையும் கபட மதியும்

ஜே.வி.பி.யினர் போல பகிடிவதையைக் கண்டிப்பவர்கள் எவருமில்லை. மறுபுறத்தில் ஒவ்வொரு பல்கலைக்கழக வளாகத்திலும் பகிடிவதையைத் தங்கள் அரசியல் தேவைகளுக்காகப் பாவிக்கி றவர்களும் அவர்கள்தான். பகிடிவதைக் குற்றவாளிகள் அகப்பட்டால் அதற்கு அரசியல் விளக்கங்கள் தந்து நியாயப்படுத்திக் காப்பாற்றப் போராடுகிறவர்கள் அவர்கள் தான். வரப்பிரகாஷ் என்ற மாணவர் பகிடிவதைக்கு உள்ளாகி மூன்று வருடங்கட்கும் முன்பு கொல்லப்பட்டார். அதற்கு விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தி ஜே.வி.பியினர் விளக்கம் தந்தார்கள். கவனிக்க அவசியமான ஒரு விடயம் உண்டு. ஜே.வி.பியின் ஆதிக்கம் வலிமையாக உள்ள பல்கலைக் கழகம் எதிலும் கூட அவர்களால் ஏன் பகிடிவதையை நிறுத்த முடியவில்லை ? விளக்கங்கள் விளங்கிக் கொள்ள முடியாதவையா ? இல்லை. மிகவும் லேசாக யாரும் விளங்கிக்கொள்ளக் கூடிய ஒரு கபட நாடகம். வருடா வருடம் ஒவ்வொரு வளாகத்திலும் நடத்தப்பட்டு வருகிறது.

பகிடிவதை செய்வோரும் ஜே.வி.பி. மாணவர் தலைமையால் தெரிந்து எடுக்கப்பட்டவர்களே. அதைத் தடுப்பதாக நடிப்பவர்கள் ஜே.வி.பியின் மாணவ முக்கியஸ்தர்களாவர்கள். கடுமையான பகிடிவதைக்கு உட்படுவதற்கும் ஜே.வி.பியால் பாடசாலை களிலிருந்து தயார்ப்படுத்தப் பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்தத் 'தயாரிகள்' கடுமையான வதைக்கு உட்பட்டு எதற்கும் ஈடுகொடுக்கத் தயங்காத தைரியசாலியாக புதிய சக மாணவர்களிடயே அடையாளம் காட்டப்படுகிறார்கள். இவ்விதமாக அடுத்த மாணவர்சமூகத் தலைவர்கள் தகுதி பெறுகிறார்கள்.

இது பார்த்துப் பழகி அலுத்துப் போகிற நாடகம். மாணவர்களை முட்டாளாக்குகிற நாடகம். இதை நம்மில் பலரும் பல காலமாக அறிந்திருக்கிறோம். ஆனாலும் மாணவர் சங்க அமைப்பும் ஜே.வி.பி. தலைமையின் சர்வாதிகாரமும் எதிர்ப்புக்குரல்கள் எழும்பாமல் கவனித்துக் கொண்டு வந்திருக்கின்றன. இன்றோ காலம் மாறி விட்டது. ஜே.வி.பி.யால் எல்லாப் பல்கலைக்கழக சங்கங்களிலும் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. உண்மையாகவே பகிடிவதைக்கு எதிரான மாணவர்கள் ஜே.வி.பி.யின் நாடகத்தை அம்பலப்படுத்தத் துணிந்து விட்டார்கள். இது பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடந்தது. மாணவர்களுக்கு விரோதமான வன்முறையை எதிர்த்துச் சங்கம் அமைக்க முயன்ற மாணவர்கள் ஜே.வி.பி ஆதிக்கம் செலுத்தும் மாணவர் சங்கத் தலைமையின் அனுசரணையுடன் அடித்து நொறுக்கப்பட்ட செய்தியை அரசியல் காரணங்களுக்காக சில சைய்தி ஊடகங்கள் திரித்து வெளியிட்டிருக்கின்றன. ஒரு விரிவுரையாளர் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் பகிடி வதைக்குள்ளாகிறதை எதிர்க்கும் இன்னொரு விரிவுரையாளரின் கார் அடித்து உடைக்கப்பட்டிருக்கிறது. கடும் தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் பகிடிவதை வழங்கிக் சாட்சி சொன்னார்கள். எனவே இது திட்டமிட்ட தாக்குதல் என்பது பலரும் இன்று தெளிவாக அறிந்த விடயம். இந்தக் காடைத் தனத்தை, ஒரு பெரிய கும்பல் அப்பாவிகளைத் தாக்கிய சம்பவத்தை இரண்டு கும்பங்களில் மோதல் என்று ஜே.வி.பி. மாணவர் தலைமை விளக்க முயற்சிப்பது ஏன். ?

தாக்குதலில் ஈடுபட்டவர்களை ஜே.வி.பி மாணவர் தலைமையில் உள்ளவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்களைப் பாதுகாக்க அவர்கள் முயற்சிப்பது ஏன் ? அவர்களைத் தூண்டி விட்டவர்கள் இவர்கள் தான் என்று பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் நம்மிடம் சொல்லியிருக்கிறார்கள். சந்தர்ப்ப சூழ்நிலைகளும் சாட்சியங்களும் அப்படியே சொல்லுகின்றன.

பகிடிவதை என்கிற அநாகரீக அசிங்கத்தை மாணவர்களாகவே முன்வந்து நிறுத்த முயலும் போது ஜே.வி.பி. மாணவர் தலைவர்கள். அதை எதிர்க்கிறது ஏன் ?

எங்கள் பெற்றோர் காலத்தில் மாணவர் அமைப்புக்களில் இடதுசாரிகளின் ஆதிக்கம் இருந்தது. 1970 வரையும் பல்கலைக்கழக மாணவர் அரசியலில் இருந்த இடதுசாரி ஆதிக்கம் பிறகு இல்லாமல் போன காரணத்தை இங்கே விசாரிக்க வேண்டியதிலிலை. என்றாலும் 1970கள் வரையில் மாணவர் சங்கங்களில் ஜனநாயகம் இருந்து, தேர்தல்களில் போட்டி இருந்தது. ஒவ்வொரு விடயமும் விவாதிக்கப்பட்டது என்று பழைய காலத்தவர்கள் பலர் மூலம் அறிந்திருக்கிறோம். இன்று அந்த நில்லமை இல்லை.

யூ. என். பி. ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட அடக்கு முறைகளை எதிர்க்கிற ஜே.வி.பி மாணவர் தலைமை அறிமுகப்படுத்திய சூழ்ச்சிக்கார அரசியல் (குமன்திரணகாரி தேசபாலன) மாணவர் சங்கங்களில் ஜே.வி.பியின். ஆதிக்கத்தை நிலை நிறுத்தியது. அதை ஜனநாயக விரோத அரசியல் மூலம் ஜே.வி.பி காப்பாற்றி வந்திருக்கிறது. சுயாதீனமாகச் சிந்திக்கும் மாணவர்களையும் விடயங்களை விவாதிக்க விரும்புகிறவர்களையும் ஓரங்கட்டுவது அவர்களுக்கு அவசியமாக இருந்திருக்கிறது. தொகுத்துச் சொன்னால் சுயாதீனமான ஒரு மாணவர் தலைமை உருவாகும் அபாயத்தை அவர்கள் நன்றாக உணர்ந்தே இருக்கிறார்கள்.

இதனாலேயே மாணவர்மீதான வன்முறைக்கு எதிரான ஒரு குழு உருவாகி வளர்வதை அவர்கள் முளையிலேயே கிள்ளி எறிய முயற்சி செய்கிறார்கள். கொழும்பில் அவர்கள் சில வருடங்கள் முன்பு இழந்ததை மீட்பது முடியாத காரியம். மொறட்டுவை அவர்கள்கையில் இல்லை. பேராதனையையும் இழக்க அவர்கள் தயாராக இல்லை. ஆயினும் அவர்களுடைய ஜனநாயக விரோதம் தொடருமென்றால் பேராதனையையும் அவர்கள் இழப்பது விரைவில் நடக்கலாம். ஜே.வி.பியின். சரிவுக்குத் தடையாக இருக்கிற இன்னொரு சக்தி பல்கலைக் கழகங்களின் நிர்வாகம்.

அரசாங்க கட்சியின் கையாட்களைத் துணை வேந்தர்களாகவும் முக்கிய பதவிகளிலும் வைத்திருக்கும் வரை பல்கலைக் கழகங்களால் சுதந்திரமாகவும் மாணவர்களுடைய நன்மைக்காகவுமம் செயல்பட முடியாது.

இந்தக் கையாலாகாத தன்மையே ஜே.வி.பியிடம் இன்றைக்கு இருக்கிற ஒரே பலம். தேர்தலுக்கு முன்பு குழப்பமோ வன்முறையோ காட்டும் கவலையை ஜே.வி.பி. சூழ்ச்சிக்காரர்கள் அறிவார்கள். அதுபோல, ஒரு சுயாதீனமான மாணவர் தலைமை வளர்வதையும் இந்த நிர்வாகிகள் வெறுக்கிறார்கள் என்பதையும் ஜே.வி.பி. தலைவர்கள் அறிவார்கள். ஜே.வி.பியின் ஆதிக்கம் தங்களுக்கு அதிகம் சிக்கலை ஏற்படுத்தாதவரை அவர்கள் பொறுத்துப் போவதையே நிர்வாகம் விரும்புகிறது.

சுதந்திரமான மாணவர்கள் அரசாங்கத்தினுடையதோ நிர்வாக த்தினுடையதோ ஆதரவை நம்பிக் செயற்பட்டால் ஏமாந்தே போவார்கள். பொழும்பின் அனுபவத்தில் சாதகமான பாதகமான பக்கங்களைப் பேராதனை மாணவர்கள் கற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

*கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள்*

நன்றி - நூலகத்திட்டம்



# அமெரிக்க மோகம்

வெளிநாட்டுக்குப் பிழைக்கப் போவதொன்றும் நமக்குப் புதிதில்லை. இலங்கையின் தேயிலைத் தோட்டத்தையும், மலேசியாவின் ரப்பர் தோட்டத்தையும், பிஜியின் கரும்புத் தோட்டத்தையும் நம் மக்கள் உருவாக்கியிருக்கிறார்கள்; பின் வளைகுடா நாடுகளுக்குப் போயிருக்கிறார்கள். முன்னவர்கள் கந்துவட்டியின் கொத்தடிமைகளாகவும்; கட்டாய அடிமைகளாகவும் போனார்கள்; பின்னவர்கள் கலியாணக்கடன் அடைக்கவும் கொஞ்சம் காசு பார்க்கவும் போனார்கள். பெரம்பலூர் போன்ற வட்சிப் பகுதிகளிலிருந்து கூட்டம் கூட்டமாக இளைஞர்கள் வேலை தேடி சிங்கப்பூர் போகிறார்கள்.

"துபாயில் தச்சு வேலைக்கு நல்ல சம்பளம், குவைத்தில் ஒட்டுனருக்கு நல்ல சம்பளம், சவுதியில் லைன்மேனுக்கு நல்ல சம்பளம்'' என்று தொழிலாளர்கள் திரவியம் தேடப் போன ரகத்தைச் சேர்ந்ததல்ல இந்த அமெரிக்க மோகம்.

"தகவல் தொழல்நுட்பப் புரட்சி → கணினி → இணையம் → அமெரிக்கா → டாலரில் சம்பளம் " என்ற எளிய கனவுதான் முதலில் மாணவர்கள் கண்களுக்குத் தெரிகிறது என்றாலும் இந்தக் கனவு மாளிகையின் கற்களுக்கிடையில் பல்வேறு கருத்துக்கள் சாந்தாகப் பூசப் பட்டுள்ளன. விளம்பரங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிகைச் செய்திகள், கல்வி நிறுவனங்கள், அரசுக் கொள்கைகள் போன்றவை வாயிலாக இருக்கருத்துக்கள் ஆக்கிரமித்துள்ளன.

அமெரிக்கக் கனவை நியாயப்படுத்துவோரிடமிருந்து சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப கீழ்க்கண்ட அரை உண்மைகளும், முழுப்பொய்களும் வெளிப்படுவதை நீங்கள் கவனித்திருக்கலம்.

"இந்தியர்களின் அறிவுத்திறனைக் கண்டு உலகமே வியக்கிறது ஏழ்மையும் மூடத்தனமும் நிறைந்த நாடு என்று மேற்குலகம் நம்மைப் பற்றி வைத்திருந்த கருத்து தகர்ந்து தரைமட்டமாகி வருகிறது.

இந்தியாவில் திறமைக்கு மதிப்பில்லை. அமெரிக்கா மதிக்கிறது. அதனால்தான் அது வல்லரசாக வளர்ந்திருக்கிறது. நம்மவர்கள் பலர் அமெரிக்கா சென்று பன்னாட்டு நிறுவனங்களில் வேலை பார்ப்பதன் மூலம் அந்நிய மூல தனத்தைக் கவர்ந்து இங்கே கொண்டு வரலாம்.

படித்தவர்கள் வெளிநாடு போகக் கூடாது என்று பேசுவது பழமை வாதம். இன்று தகவல் தொழில் நுட்பப் புரட்சியால் உலகமே கிராமமாகி விட்டது. இனி உலக வேலை வாய்ப்பு பற்றித்தான் பேச முடியும்.


அமெரிக்கா போவதே ஒரு வகையில் நாட்டுப் பற்றுள்ள நடவடிக்கைதான். அங்கிருந்து டாலரை அனுப்பினால் இங்கே அந்நியச் செலாவணி பெருகும்.

இங்கிருந்து வேலைக்காகச் செல்லும் ஒவ்வொரு இளைஞனும் முதலாளியாக வாய்ப்பு உள்ளது. புதிய மென்பொருள் எழுதும் அறிவு, இணையத்தில் புதிய கவர்ச்சிகரமான சேவையை அறிமுகப்படுத்தும் திறமை ஆகியவை இருந்தால் போதும். மூலதனம் இல்லாமல் ஒவ்வொரு அறிவாளியும் முதலாளி ஆகலாம்.

இன்று அமெரிக்காதான் வல்லரசு, நம்மவர்கள் பெருமளவில் அங்கே குடியேறுவதன் மூலம் யூதர்களைப் போல ஒரு லாபியை (குழுவை) உருவாக்கி அமெரிக்க அயலுறவுக் கொள்கை நமக்குச் சாதகமாக இருப்பது போலச் செய்ய முடியும்.

விவசாயம், ஆலை உற்பத்தி ஆகிய வற்றைச் சார்ந்து பொருளாதாரம் இயங்கிய காலம் முடிந்து விட்டது. இனிமேல் கணினி - இணையம், மின் - வணிகம், இணையப் பத்திரிகைகள், மல்டி - மீடியா, தொலைக்காட்சி போன்ற புதிய புதிய சேவைத்துறை களுக்குத் தான் எதிர்காலம் - உற்பத்தித் துறைக்கு அல்ல.

தொழில்புரட்சியை நாம் தவறவிட்டு விட்டோம். அறிவுப் புரட்சி நம் கதவைத் தட்டுகிறது. நாம் தகவல் தொழில்நுட்ப வல்லரசாக வளர முடியும். நூறு பில் கேட்ஸ்களை உருவாக்கலாம். இணையத்தில் யார் வேண்டுமானாலும் கருத்தைப் பரப்பலாம். தொழிலில் போட்டியிடலாம். இது ஒரு உலகு தழுவிய ஜன நாயகம்"



பில் கேட்ஸ் பில் கிளின்டன்

இந்த வாதங்கள் அனைத்தும் அமெரிக்காவின் தலைமையிலான ஒற்றைத்துருவ உலக அமைப்பை கேள்விக்கிடமின்றி ஏற்றுக் கொள்வதுடன் சம்பந்தப்பட்டவை.

தமது தடையற்ற வர்த்தகத்திற்காக நாடு களின் எல்லை இறையாண்மை ஆகிய வற்றைத் தகர்த்தெறியும் பன்னாட்டு நிறுவனங்களின் திட்டத்துடன் சம்பந்தப்பட்டவை. பின் தங்கிய ஏழை நாடுகளை மீண்டும் காலனி நாடுகளாக மாற்றும் சதியுடன் சம்பந்தப்பட்டவை.

உலகு தழுவிய உற்பத்தி வலயங்கள், உலகு தழுவிய வேலைப் பிரிவினை என்று உற்பத்தி முறையில் பன்னாட்டுநிறுவனங்கள் புகுத்தும் புதிய உற்பத்திப் போக்குகளுடன் சம்பந்தப்பட்டவை.

வெறிகொண்ட முதலாளித்துவச் சந்தை வாதத்துடன் சம்பந்தப்பட்டவை.

**ஒரு ஏகபோகக் கொள்ளைக்காரன் காவியத் தலைவனாகச் சித்தரிக்கபடும் போது வழிப்பறியும் திருட்டும் அறநெறிக்குரிய அந்தஸ்தைப் பெறுவதில் வியப்பென்ன ?**

உடல் உழைப்பை இழிவானதாகவும், மூளை உழைப்பை மேன்மையானதாகவும் கருதும் பார்ப்பனியக் கண்ணோட்டம், அறிவைத் தன் சொந்த உடைமையாகக் கருதும் முதலாளித்துவ சமூக விரோதக் கண்ணோட்டம், இவையிரண்டும் இணைந்த 'தகுதியற்றவர்கள் அழியத்தான் வேண்டும்' என்று கூறும் சமூக டார்வி னியக் கண்ணோட்டம் ஆகிய அனைத்தையும் வெவ்வேறு விதமாக வெளியிடுகிறார்கள் இந்த புரட்சிகாரர்கள்.

அமெரிக்காவுக்கு ஓடியவர்கள், அந்நிய நிறுவனங்களுக்கு ஆள்பிடிக்கும் கங்காணிகள், அறிவைக் காசாக்கும் அற்பர்கள் - இவர்கள்தான் உலகமய மாக்கம் படைக்கும்இலக்கியத்தின் தேசிங்கு ராஜாக்கள்.

ஆவியெழுப்பும் கூட்டத்தின் தேவ சாட்சியங்களைப் போல இவர்கள் ஒருவர் பின் ஒருவராக மேடையேறி ' முதலாளித்துவத்தின ஆவி' தமக்குள் இறங்கிய அனுபவத்தை விவரிக்கிறார்கள். பரவசமடைந்த மதுரை மாணவரைப் போன்ற இளைஞர்கள் "அல்லேலுயா" என்று உடல்நடுங்கக் கூவுகிறார்கள். இந்த நற்செய்தியை எல்லா மாணவர்களுக்கும் கொண்டு செல்கிறார்கள். வேலைவாய்ப்பு தேடும் இளைஞன் உலகமயமாக்கத்தின் பிரச்சாரகனாகப் பதவி உயர்வு பெறுவது இப்படித்தான்.

" இங்கு நிலவும் முதலாளித்துவ உணர்ச்சியின் வேகமும் வெறித்தனமும் எனக்கு ஆச்சரியமளிக்கிறது" என்கிறார். இந்தியாவுக்கு வந்திருக்கும் இன்டெல் கணினி நிறுவனத்தின் தலைவர் கிரெய்க் பாரெட் இதென்ன ஆச்சரியம், இதைவிட ஆச்சரியத்தைக் கேளுங்கள்.

"பில் கேட்ஸின் மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கெதிராக அமெரிக்கா நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியுள்ளதே அதைப் பற்றி மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள் ? " என்று ஒரு அரசுப் பொறியியல் கல்லூரி மாணவரைக் கேட்டேன். "பில் கேட்ஸ் தண்டிக்கப்படுவது தகவல் தொழிநுட்பத் துறைக்கே நல்லதில்லை. அவர் இல்லையென்றால் இந்தத் துறையே இல்லை என மாணவர்கள் கருதுகிறார்கள்" என்று அவர் பதிலளித்தார்.

பில் கேட்ஸ் மீதான குற்றச்சாட்டு என்ன, தீர்ப்பு என்ன என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் பில்கேட்ஸ் பக்தர்களாகிவிட்ட மாணவர்கள் !

பில்கேட்ஸ் 10 வயதில் கணினியைச் கற்கத் தொடங்கிய கதை, அவர் உலகின் முதல் பணக்காரராக உயர்ந்த கதை, .அவரது தருமசிந்தனை, அவரது நாயின் உணவுப் பழக்கங்கள் போன்றவை உட்பட பில் கேட்ஸ் புராணமாக பத்திரிகைகளில் வருகின்றன.

'எசமான் காலடி மண்ணெடுத்து நெத்தியில் பொட்டு வைப்போம் 'என்கிறார் சந்திரபாபுநாயுடு. கேட்ஸ் இந்தியாவந்தபோது அவரது டவாலியைப் போல பின்தொடர்ந்தார். இந்தியப் பிரதமர்.

ஒரு ஏகபோகக் கொள்ளையன் காவியத் தலைவனாகச் சித்தரிக்கப்படும் போது வழிப்பறியும் திருட்டும் அறநெறிக் குரிய அந்தஸ்தைப் பெறுவதில் வியப் பென்ன ? எனினும் வாலியின் கொலையையும் சம்புகன் கொலையையும் ராம பக்தர்களுக்குத் தெரிவிப்பது நமது கடமை.

உலகில் உள்ள 90 சதவீதம் கணிணிகளின் மூளையாகவும், நரம்பு மண்டலமாகவும் இருப்பது பில் கேட்ஸின் விண்டோஸ் என்ற ஆப்ரேடிங் சிஸ்டம். வின்டோஸ் - 95, 97, 98 என்று பில் கேட்ஸின் மைக்ரோசாப்ட் நிறுவனம் புதிய கண்டுபிடிப்புகளை சேர்ப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருப்பது மட்டுமல்ல, பல புதிய கண்டுபிடிப்புகளைத் தடுக்கும் ஆயுதமாகவும் இது பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

புதிய மென்பொருள் (Software) உருவாக்குவோர், சில்லுகளை (Chips) உருவாக்குவோர், இணைய வணிக (Dotcom) நிறுவனங்கள் யாராக இருந்தாலும் பில் கேட்சுக்குப் பணியாதவர்கள் அழிக்கப்பட்டார்கள். விண்டோஸ் - இல் புதிய வசதி களைச் சேர்ப்பது என்ற பெயரில் கணினியின் மீது தனக்கிருந்த ஏகபோகத்தை இணையத்திற்கும் (Internet) விரிவுபடுத்தினார் பில்கேட்ஸ்.

மைக்ரோசாப்ட் நிறுவனம் தனது ஏக போகத்தை நிலைநாட்ட ஒரு

9ம் பக்கம் பார்க்க

# சோஷலிசம் ஏன் ?

## அல்பேட் ஐன்ஸ்ற்றைன்



இன்று நிலவும் பொருளாதார துன்பங்களுக்கு முதலாளித்துவ சமூக அமைப்பே காரணம் என்றே கருதுகின்றேன். பெரும் உற்பத்தியாளர்கள் நடைமுறையில் உள்ள சட்டத்திட்டங்களுக்கு அமையவே மக்களை நசுக்கி வருகிறார்கள். பாவனையாளர்களுக்காகவோ மேலதிக விற்பனைக்காகவோ உற்பத்தி செய்பவை தனியாரின் உடமையாகிறது என்பதை நாம் உணர வேண்டும். வழமையான வரைவிலக்கணப்படி இல்லாத போதிலும் உற்பத்திப் பொருளில் எவ்வித பங்கினையும் பெறாதோரை நான் "தொழிலாளர்'' என்று குறிப்பிடுகின்றேன்.

உற்பத்தி செய்வோர் உற்பத்திக்கு தொழிலாளரின் சேவையினைப் பெற்றுக் கொண்டு பொருளாதாரத்திற்கும் உரிமை யாளர் ஆகின்றனர். உற்பத்தியான அனைத்தும் முதலாளியின் உடமையாகின்றது. இதில் முக்கியமான அனைத்தும் முதலாளியின் உடமையாகின்றது. இதில் முக்கியமானது உற்பத்திக்கும் உற்பத்தி செய்கின்ற தொழிலாளரின் வேதனத்திற்கும் உள்ள தொடர்பாகும். வேலை இன்மை காரணமாக தொழிலாளருக்குத் தரப்படும் வேதனத் தொகைக்கும் அவர்கள் உழைப்பால் உருவாகும் பொருள்களின் பெறுமானத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கொள்கை அளவில் கூட தொழிலாளர் வேதனத்திற்கும் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் பெறுமதிக்கும் எவ்வித தொடர்பும் கொள்ளப்படுவது இல்லை.

தனிநபர் முதலீடுகள் அனைத்தும் ஒரு சிலர் கையில் முதலீட்டாளரிடையே காணப்படும். போட்டி காரணமாகத் தேங்கிவிடுகிறது. வளர்ந்து வரும் தொழில் நுட்பம் காரணமாகவும் தொழிலாளர்களிடையே நிலவும் பேதங்கள் காரணமாகவும் பெரிய முதலீட்டாளர் சிறியோரை நசுக்கி விடுகின்றனர். இதனால் பாரிய அதிகாரமும் பெரு முதலும் இப்படிப் பட்ட ஜனனாயக சமூகத்தில் சட்டசபை உறுப்பினராக உள்ளோரைத் தேர்ந்து வைக்கும் அரசியல் கட்சிகளுக்குப் பொருளுதவியை வழங்குபவர்கள் இந்தச் செல்வந்தரே. இவர்கள் தமது பொருள் பலத்தால் மக்களையும் சட்டசபை உறுப்பினர்களையும் பிரித்து வைத்து விடுகின்றனர். அதன் காரணமாக சட்டசபை உறுப்பினர்கள் நசுக்கப்பட்ட மக்களின் துன்பங்களைத் துடைக்க எத்தனிப்பதில்லை. மேலும் தற்போதுள்ள சட்டதிட்டங்களின் படி தொடர்பு சாதனங்களைக் கட்டுக்குள் வைத்திருப்பவர்களும் இந்த முதலாளிவர்க்கமேயாகும். இதன் காரணமாகவே தமது அரசியல் உரிமைகள் அனைத்தையும் சாதாரண மக்கள் நிலை நாட்ட முடியாது இருக்கிறது.

தனியார் வசம் பொருளாதாரம் இருப்பதற்குரிய காரணங்கள் இரண்டு. ஒன்று, உற்பத்தி தனியார் கையில் இருப்பதும் அதன் வானிபம் செய்யும் அதிகாரமும் அவர்களிடயே இருப்பதுமாகும். இரண்டு, தொழிலாளர்களும் அவர்கள் வகுத்துக் கொண்ட ஒப்பந்தத்திற்கு உட்பட்டே இருப்பதுமாகும். நீண்ட போராட்டங்களின் பயனாக தொழிலாளர்கள் சில துறைகளில் சில சலுகைகளைப் பெற்றுள்ளார்கள். உண்மையில் முதலாளித்துவ சமுதாயம் ஒன்று இல்லைத்தான். ஆனாலும்

**உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியான அல்பேட் ஐன்ஸ்ற்றைன் சோஷசிலம் ஏன்? என்னும் தலைப்பில் 1949ல் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியே இதுவாகும். இக் கட்டுரை அதே ஆண்டில் அமெரிக்காவின் மந்திலி ரிவியூ சஞ்சிகையில் வெளி வந்தது. (மொ. ர்)**

கூட தற்போதைய பொருளாதார முறை முழுமையான முதலாளித்துவ முறையிலிருந்து மாறுபடவில்லை.

உற்பத்தி இலபத்திற்காகவே அன்றி தேவைக்காக அல்ல. ஆற்றலும் விருப்பமும் கொண்ட அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதில்லை. பெரும் தொகை யான வேலையற்றோர் இருந்து கொண்டுதான் உள்ளனர். தொழிலாளர்களுக்கு எப்போதுமே வேலையை இழக்கும் அபாயம் உள்ளது. வேலையற்றோரும், குறைந்த ஊதியம் பெறுவோரும் பயன் உள்ள சந்தையை உருவாக்காததினால், பாவனைப் பொருள் உற்பத்தி கட்டுப்பாட்டிற்குள் வந்ததினால் பாரிய துன்பமே விளைகிறது. தொழில் நுட்ப அபிவிருத்தி வேலைச் சுமையைக் குறைக்காது வேலையின்மையத்தான் அதிகரிக்கிறது. இலாப நோக்கும் முதலாளிகளிடையே உள்ள போட்டி முதலின் தேக்கத்திலும் பயன்பாட்டிலும் நிலையில்லாத் தன்மையை உருவாக்கி கடும் பொருளாதார சரிவுகளுக்கு வழி வகுக்ககிறது. கட்டுப் பாடற்ற போட்டிகள் பெரும் அளவிலான தொழில் அழிவுகளுக்கும் நான் முன்பு குறிப்பிட்ட சமூக சிந்தனை நசிவுகளுக்கும் வழி வகுக்கிறது.

தனி நபரின் நசிபாடு களே எனது எண்ணப்படி முதலாளித்துவ முறையின் பாரிய சீர்கேடாகும். இக் கேட்டின் காரணமாக எமது கல்வி முறை பாதிக்கப்படுகிறது. மிகைப்படுத்தப்பட்ட இந்த போட்டி மனப்பான்மையே மாணவரிடையே எதிர்கால வேலை வாய்ப்புக்களுக்காகக் கைக்கொள்ளவேண்டிய வெற்றியைப் போற்றிப் பெறும் நோக்கை வளர்க்கிறது.

நான் திட்டமாகக் கூறுவேன். இத்தகைய தீயனவற்றை அகற்றத் தேவைப்படுவது சமத்துவ சோஷலிசப் பொருளாதாரத்தை அமைப்பதேயாகும். அதேவேளை எமது கல்வி முறையும் அதற்கேற்றபடி மறுசீரமைக்கப்பட வேண்டும். இப்படிப் பட்ட பொருளாதாரத்தில் தான் உற்பத்தி அனைத்தும் சமுதாயத்திற்கே உரித்தானதாக இருக்க முடியும். நுகர்வதும் திட்டமிட்ட வகையில் இடம்பெறும். திட்டமிட்ட பொருளாதாரம் சமூகத்தின் தேவைக்கேற்ற உற்பத்தியை அமைத்துக் கொள்வதும், ஒவ்வொருவரினதும் (ஆண் பெண், குழந்தைகள்) வருவாயை உத்தரவாதப்படுத்துவதும் ஆகும். தனி நபரின் கல்வியையும் ஆற்றல்களையும் வளர்ப்பதோடு உடன் உள்ளோரிடம் பொறுப்புணர்ச்சியோடு இருக்கவும் வழிவகுக்கும். அதிகாரம், வெற்றியும் சிறப்பு அடையும்.

*தமிழில் : க. நடனசபாபதி*

நன்றி - நூலகத்திட்டம்



## நாடகம் - ஒரு நோக்கு - சோ. தேவராஜா

# நாகமண்டலம்

## "இரவல் புடவையில் இது நல்ல கொய்யகம்"



கடந்த ஜூலை 12ம் திகதி மாலை 6.30 மணிமுதல் இரவு 9.30 மணிவரை லும்பினி அரங்கில் கிரிஷ் கர்னாட்டின் 'நாகமண்டலம்' என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது.

சிவமோகன் சுமதி என்பவரின் நெறியாள்கையில் விபவி மாற்றுக்கலாசார மையத்தின் நிர்வாகத்தில்; 'சுவீகரிக்கப்பட்ட' அரங்காடிகள் என்ற அமைப்பினால் இந்திய நாடக ஆசிரியர் கிரிஷ் கர்னாட்டிடம் இரவல் வாங்கப்பட்ட 'நாகமண்டலம்' என்ற அரங்க நிகழ்வுடன் சபையோர் அரங்க அனுபவ உறவு கொள்வதென்பது பெரும் பாடாகிவிட்டது.

முதலில், அயல் மொழி நாடகமென்பதனால் எமது நாட்டுக்குரிய பொருத்தப்பாடு ரசிகர்களுக்குப் புரியும் வகையில் நாடக இயக்குனர் சிறிதேனும் முயற்சிக்க எண்ணியதாகத் தெரியவில்லை.

பெண்கள் பற்றிய ஒடுக்குதலின் கூறுகளை இலங்கை மக்களின் உள்ளுணர்வுகளிலிருந்து பெற்றுக் கொண்டு நாடகத்தை நெறிப்படுத்த முயற்சிப்பதற்குப் பதிலாக மேலைத்தேசச் சிந்தனையின் கொச்சைத்தனப் புரிதல் என்ற நோய்க்கு ஆட்பட்டு ஏன் "ஒருத்திக்கு ஒருவன்" என்ற வரையறை ? "கள்ளக்காதலன் நாகத்தையும் கணவனாகக் கொண்டாலென்ன" என்ற [illegible] வீரியம் தொற்றிக் கொண்டு அவதிப்படுவதனை நாடக மேடையேற்றம் வெளிப்படுத்த விரும்பியுள்ளது போலும் ?..

இந்திய நாடகமொன்றில் கீழைத்தேய பண்பாட்டுக் கூறுகளை புரிந்து கொள்வதற்குப் பதிலாக மேலைத்தேச இசையைப் பயன் படுத்தியமை கொடுங்கோன்மையாகவிருந்தது. நாகமும் ராணியும் தழுவிக் கொள்ளும்போது சுவாலைகளின் பாடல் - ஆடல் யாவும் அரங்கில் மொழிப்பயிற்சிப் பாடசாலையில் சிறுவர்கள் பயிற்சி பெறுவதுபோல் இருந்தது. நாகமும் - ராணியும் தழுவிக்கொள்ளும்போதுகூட 'காதல்' உணர்வு வெளிப்படும் விதமாக நடிப்பு வெளிப்படவேயில்லை. களவொழுக்கம் பற்றிய கற்பனைகள் தமிழ் இலக்கியத்தில் அநேகமுள்ளன. நாகபாம்பு பற்றிய படிமம் இலங்கைத் தமிழர் வாழ்வில் நயினாதீவு ஆலயம் முதல் 'நாதர் முடி மேலிருக்கும் நாகபாம்பு' என்ற பாடல் கொண்ட கோலங்கள் வரை அதிகமாகவேயுள்ளன. இந்த உணர்வுப்பரிமாற்றம் ஏதுவுமற்றுச் 'சப்' பென்று நாடகம் அமைந்தது.

"இது வேற்று மொழி நாடகம் உங்களுக்கு விளங்காமலிருப்பதுதான் எமது விருப்பம்" என்பது பதிலாக இருக்கலாமோ தெரியவில்லை.

கலைகளின் பயன்பாடு சமகால மக்கள் வாழ்வுக்குரியது. எனவே வரலாற்றுக் கருப்பொருள் எனில் அது சமகால மக்களின் வாழ்வுத் தேவைக்கு - கலைப்பசிக்கு ஊட்டமளிக்க வேண்டும். அயல்மொழிக் கலைப்பொருள் எனில் அது அளிக்கைக் குட்படும் மக்கள் வாழ்வின் உணர்வுகளோடு ஊடாட்டம் கொள்ள வேண்டும். இவ்வாறமையத் தவறின் அக்கலைப்படைப்பு அம்மொழியில் அம்மக்களின் மத்தியில் பெற்ற வெற்றியைக் கூட புரிந்து கொள்ள முடியாததுடன் அக்கலைப்படைப்பையும் ஊறுசெய்த பாவத்துக்குள்ளாக நேரிடும். நயினை நாக பூசனிதான் "காப்பாற்ற" வேண்டும்.

அடுத்ததாக, தமிழ் மொழியை எவ்வாறு ஆங்கிலப்பாணியில் உச்சரித்து தமிழ் நாடகம் நிகழ்த்துவது என்பதற்கு சிறந்ததொரு உதாரணமாக சுமதியின் நாகமன்டலம் "அபார சாதனை" படைத்ததெனலாம். நெறியாளரின் உச்சரிப்புத் தொனி நடிகர்களிடம் தொற்றிக் கொண்டுள்ள வியாதியை கவனிக்க முடிந்தது.

நெறியாளர் சுமதி என்பவரே ராணி என்ற பிரதான பாத்திரமாகவும் பாகமேற்றுள்ளார். ராணி என்ற பாத்திர உடையலங்காரமும் நடிப்பு முறைமையும் சித்த சுவாதீனத்துக்கு ஆட்பட்ட ஓர் பாத்திரத்தைச் சித்திரிப்பதாகவே அமைந்தது. 'கதை' என்ற பாத்திரத்தை ஏற்று நடித்த ஆர். யூ. மோனிட்டா தனுஷாவின் தோற்றம் குரல்வளம் உச்சரிப்பு திறன் ஆகியவற்றை அவதானித்த பொழுது அவரே 'ராணி' என்ற பாத்திரத்தை ஏற்றிருப்பின் நாடகப் பாத்திரத் தேர்வு பொருத்தமாய் அமைந்திருக்கும்.

மனுஷன் பாகமேற்று நடித்த டேவிட் ராஜன், சுவாலைகளில் தோன்றிய தினேஷ் சிவகுருநாதன் அப்பண்ணாவாகவும் நாகம் ஆகவும் நடித்த பா. விஜயசாந்தன் ஆகியோரின் தமிழ் உச்சரிப்பு நன்றாயமைந்தது. இருபாத்திர வேறுபாடுகளை உணர்ந்தும் பாத்திர வார்ப்பினை வெளிப்படுத்தும் வகையில் விஜயசாந்தன் தனது அங்க அசைவுகளையும் பேச்சுத் தொனியையும் சற்று வித்தியாசப் படுத்தியிருக்கலாம்.

மூப்பர்களில் வயித்தீஸ்வரன் சிவஜோதியின் ஆரம்ப வசனங்களில் நெறியாளரின் பேச்சுத் தொனி தொற்றிக் கொண்டதெனினும். அவரது உடையலங்காரம், முக பூச்சு பொருத்தமாகவிருந்ததுடன் நடிப்பு இயல்பாய் அமைந்தது.

கப்பண்ணாவாக நடித்த மௌன குரு சித்தார்த்தன் தனது பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளரென்பதுடன் அவரது சொல் உச்சரிப்பு பாத்திரத்தின் அப்பாவித்தனத்தை வெளிப்படுத்துவதாய் அமைந்தது. ஆமைப்பூட்டு, கடவுளே, அரைப்பனி ஆகிய சொற்களை உச்சரித்த விதத்தை உதாரணமாகச் சொல்லலாம்.

இந்நாடகத்தில் குருதவ்வாவாக நடித்த ஷாமினி மாசிலாமணி யாழ்பாணப் பேச்சோசைப் பாங்கில் பேசிய முறைமையும், அங்க அசைவும், நடிப்பும் சிறப்பாக அமைந்தது.

சாட்சியமைப்பைப் பொறுத்தவரையில் கதவும் பூட்டும் பெண்ணொடுக்குமுறையின் குறியீடாக இருந்த பொழுதும் பூட்டு 'உண்மையான' அளவிலையே இருந்தமையால் அதன் தாக்கத்தை உணர முடியவில்லை. மிகப் பெரிய அளவில் 'பூட்டு' வரையப்பட்டு வைக்கப்பட்டிருப்பின் அது நாடகப்பிரதியின் தாக்கத்தை யாவது ஏற்படுத்தியிருக்கும்.

ராணி, அப்பாண்ணா, மூப்பர்கள் தவிர்ந்த பாத்திரங்களின் உடையலங்காரம் பொருத்தமின்றி அமைந்ததெனிலும் பிரதீப் சந்திரசிறியின் இந்தியபாணி உடையலங்காரம் பற்றிய முயற்சி பொருத்தமாய் அமைந்தது.

ஒளியமைப்பு செய்த வசந்த குமார முயற்சித்த பொழுதும் வெற்றியளிக்கவில்லை. வயலின் வாசித்த விநாயக மூர்த்தியை அடையாளம் தெரியாமல் இசையாற்றிய கருதுகோள் சிதைக்கப் பட்டிருந்தது.

மக்கள் கலைகள் என்பன சாதாரண மக்களிடமிருந்து பெயர்க்கப்பட்டு மேட்டுக் குடியினரிடம் சிறைப்பட்டிருக்கும் அவலம் பரத நாட்டியம் முதல் இந்நாடகங்கள்வரை காட்சிகளாக்கப்பட்டுள்ளன.

பெண் ஒடுக்கு முறை - பெண் விடுதலை பற்றிய சரியான கருத்தியல்கள் புரிதல்களாக மக்கள் மத்திக்கு சென்றடையாதவரை இதுபோன்ற நாடகங்கள் அரங்கேறவே செய்யும். அதனை அனுபவித்து கஷ்டமுற வேண்டிய நிர்ப்பந்தமும் நாடக ரசிகர்களுக்கு இருக்கவே செய்யும்.

## வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் தொழிலாளர் அவலம் நீடிக்கிறது !

வவுனியா சென்றன் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்கள் அரசின் நடவடிக்கையாலும் நிர்வாகத்தின் நடவடிக்கையாலும் இரு வழிகளில் நசுக்கப் படுகின்றனர். இதற்கு எதிராக சகல தொழிலாளர்களும் அணி சேர்வதும் போராடுவதும் அவசியமாகிறது.

கொழும்பு மாநகரசபையின் முன்னாள் மேயரும், இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமான திரு கணேசலிங்கம் அவர்களின் தொழிற் சாலையே இதுவாகும். இப்படி பொறுப்பான ஒருவரின் தொழிற் சாலையில் நாம் அநுபவிக்கும் கஷ்டங்கள் பல. இது பற்றிப் பலதடவைகள் எடுத்துக் கூறியும் இதுவரை கவனிக்கப் படவில்லை. தொழிலாளருக்குரிய லீவு, சம்பள உயர்வு, ஊக்குவிப்புக்கள் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை. ஆனல் E.P.F, E.T.F. சம்பளத்தில் வெட்டப் படுகின்றன. ஆனால் அவை உரிய இடம் சேருமோ தெரியவில்லை. தேர்தல் வரும்போது ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் உயர்த்தப்படுகிறது என்ற இனிப்பான செய்தியை வழங்குகின்றார்கள். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 500/= கூட்டுவதாக அறிவித்தார்கள். மூன்று மாதத்தின் முன்னர் 1000/= கூட்டுவதாகப் பேசினார்கள். ஆனால் எல்லாம் பேச்சளவில் நின்று விட்டது. நாமோ குறைந்த சம்பளத்துடன் மிகவும் கஷ்டப் படுகின்றோம். மாதாந்தச் சம்பளம் இல்லை, லீவு இல்லை, வேலைக்கு சேருபவருக்கு ஆரம்பத்தில் 76/= வழங்கப்படுகின்றது. 6 மாதத்தின் பின்னர் 98/= வழங்கப்படுகின்றது. 1992 ல் வேலைக்குச் சேர்ந்தவருக்கு சுமார் 105 /= வழங்கப்படுகிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களில் சுமார் 25 பேர்வரையில் 115/= பெறுகின்றார்கள். ஏனையோர் 98/= - 105/= வரையிலேயே உள்ளனர். இவர்களால் 2500/= மேல் சம்பளம் பெற முடியவில்லை. ஒருவர் மாதத்தில் 26 நாளும் வேலை செய்தால் 400/= ஊக்குவிப்பும் 25 நாள் வேலை செய்தால் 20/= ஊக்கு விப்பும் வழங்கப்படுகிறது. 24 நாள் செய்தவருக்கு ஊக்குவிப்பு இல்லை.

இந்த 2500/= சம்பளத்தில் அசுரனைப் போல வளர்ந்து செல்லும் விலை வாசியுடன் இந்த தொழிலாளர் சீவிக்க முடியுமா என்பதை சிந்திக்கிறார்கள் இல்லை.

வருடாந்தம் வழங்கப்படும் போனஸ் தொகையும் வழங்கப்படுவதில்லை சுகவீனமாகவோ அல்லது வேறு தேவைகளுக்காக லீவு எடுத்தால் ஒழுங்கான வரவுக்கான போனஸ் 400/= பெறமுடிவதில்லை. ஆனால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகள் செய்து முடிக்கப் படாவிட்டால் லீவு நாட்களில் வேலை செய்து கொடுக்க வேண்டியுள்ளது. இந்தமேலதிக நாளுக்கு எதுவித சம்பளமும் வழங்கப் படுவதில்லை. அதுமாத்திரமல்ல வேலை இல்லாத வேளைகளில் இரண்டாவது தொழிற்சாலையின் வேலைகளும் செய்து கொடுக்க வேண்டி இருக்கிறது.

நாம் ஓய்வொழிச்சலின்றி வேலை செய்து கொடுத்தும் எமது கோரிக்கைகள் புறக்கணிக்கப் படுகின்றன. "நட்டம் நட்டம்" என்றே சொல்லி தட்டிக் கழிக்கிறார்கள். ஆடைத் தொழிற்சாலைகளால் அதிகலாபம் ஈட்டப்பட்டுகின்றது என்று எல்லா ஊடகங்களும் தெரிவிக்கின்றன. எவ்வாறு நட்டம் ஏற்படுகிறது ?

ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் காரணத்தால் எம் போன்றவர்களுக்கு எமது வருமானம் பற்றிப் பார்க்காமல் சமூர்த்தி, இதர சலுகைகள் போன்றவை கிடைப்பதில்லை. தொழிற்சாலை வளவில் கால் வைத்துவிட்டால் ஏதோ ஆயிரக்கனக்கில் மாதாந்தச் சம்பளம் பெறும் ஊழியர்களென கச்சேரி நிர்வாகம் கருதுகிறது. எமக்கு நிரந்தரமான வருமானமுமில்லை, நிவாரணமுமில்லாத நிலையில் இருக்கின்றோம்.

இதனைவிட இன்றைய பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான சூழ் நிலையில் எமது பிரயாணத்துக்கு "ஜொப்காட்" உதவிகரமாக அமையும். இந்த "ஜொப் காட்" கூட எமக்கு வழங்கப்படவில்லை. இதனால் ஒவ்வொரு பொயின்றிலும் நாம் தாமதிக்க வேண்டி இருக்கிறது. இதனைக் கூட செய்து தருகிறார்கள் இல்லையே.

இத்தொழிற்சாலைக்கு அயலில் உள்ளவர்கள் மாத்திரமல்ல செட்டிகுளம், பூவரசங்குளம், சிதம்பரபுரம், மாமடு, மடுகந்தை போன்ற தூர இடங்களில் இருந்தும் வேலைக்கு வருகிறார்கள். பெண்களுக்கு வேலை

10 பக்கம் பார்க்க

## அமெரிக்க மோகம்

8 பக்கத் தொடர்

கொள்ளைக் காரனைப் போல நடந்து கொண்டிருக்கிறது" என்று தீர்ப்பளித்திருக்கிறார் கேட்சுக்கு எதிரான இவ்வழக்கை விசாரித்த நீதிபதி.

நெட்ஸ்கேப், இன்டெல், ஆப்பிள், காம்பாக், சன் போன்ற பல பெரிய பன்னாட்டு நிறுவனங்களின் கண்டு பிடிப்புகள் பில் கேட்ஸால் முடக்கப் பட்டன; அல்லது அவை மிரட்டிப் பணிய வைக்கப்பட்டன.

"இதன் விளைவாக, நுகர்வோருக்கு உண்மையிலேயே பயனளித்திருக்கக் கூடிய பல புதிய கண்டுபிடிப்புகள் கருவிலேயே கொல்லப்பட்டன. அவை மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் நலனுக்கு எதிராக இருந்தன என்ற ஒரே காரணத்துக்கா" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி ஜாக்சன்.

பில் கேட்ஸ் இல்லையென்றால் கணினியும் இல்லை. இணையமும் இல்லை என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள் மாணவர்கள். அவர் இருப்பதனால்தான் கணினி இணையத்தில் முன்னேற்றமில்லை, விலை குறையவுமில்லை என்கிறார் நீதிபதி.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தனது உலக மேலாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு மட்டுமல்ல, ராணுவ ரீதியாக அமெரிக்க வல்லரசின் உலக மேலாதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக உளவு வேலையும் பார்க்கிறது பில் கேட்ஸின் மைக்ரோசாப்ட் நிறுவனம் என்பதும் அம்பலமாகியிருக்கிறது. (சுருக்கம்)

நன்றி

புதிய கலாச்சாரம

நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
PUTHIYA POOMI
சுற்று 07 ஜூலை/ஆகஸ்ட் 2000 பக்கம் 10 விலை 10/= சுழற்சி 36

## வாழ்த்தும் திடசங்கற்பமும்

யூலை 3ம் திகதி புதிய ஜனநாயகக் கட்சி தனது 22வது (1978-2000) ஆண்டு நிறைவை புரட்சிகர உணர்வோடு நினைவு கூர்ந்து கொண்டது. புதிய பூமியும் தனது புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. கட்சியின் புரட்சிகர அரசியல் வெகுஜன இதழாக புதிய பூமி கடந்த 22 ஆண்டுகளாக (முன்பு பாட்டாளி, செம்பதாகை பெயர்களில் வெளி வந்தது.) தனது பணியினை முன்னெடுத்து வந்துள்ளமை இவ்வேளை நினைவு கூரத்தக்கதாகும். தொடர்ந்தும் புதிய பூமி தனது பாதையில் உறுதியுடன் பயணம் செய்யும் என்ற திடசங்கற்பத்தை எடுத்துக் கொள்கிறது.

ஆசிரியர் குழு.

# மலையக மக்களின் வாழ்வுரிமைக்கு அரசியலமைப்பு உத்தரவாதம் வேண்டும்

இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்காக அரசாங்கம் எடுத்துவருவதாகக் காட்டிக் கொள்ளும் எந்நடவடிக்கையிலும் மலையகத் தமிழ் மக்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்பு கொடுக்கப்பட வில்லை, மலையகத்தமிழ் மக்கள் ஒரு தனியான தேசிய இனம் என்ற அடிப்படையில் இல்லாவிட்டாலும் தமிழ் மொழியை பேசுகின்ற இன்னொரு சமூகம் என்ற அடிப்படையில் கூட அவர்களின் அபிப்பிராயங்கள் அறியப்படவில்லை.

அந்தளவுக்குத்தான் இலங்கையின் "தேசிய அரசியல் நீரோட்டத்தில்" மலையகத் தமிழ் மக்களுக்கு இடம் கிடைத்துள்ளது. அந்த அந்தஸ்தைத்தான் அன்றைய இலங்கை இந்தியன் காங்கிரஸ் தலைவர்கள் தொட்டு இன்றைய பாராளுமன்ற, மாகாணசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் தொழிற் சங்கத் தலைவர்கள் வரையான மலையகத் தலைவர்கள் எனப்படுவோர்களால் பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளது.

மலையகத் தலைவர்கள் எனப்படுவர்களில் சில மலையகத்தமிழ் மக்களுக்கு பிரஜாஉரிமை மட்டும்தான் பிரச்சினை என்று அவ்வப்போது எடுத்துக்கூறி வருகின்றனர். சிலர் மலையக மக்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்றே கவலை கொண்டுள்ளனர்.

அரசாங்கம் சொல்லுகிற இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றி மலையகத் தொழிற்சங்கங்கள் இதயபூர்வமாகச் சிந்திக்கவில்லை. அவற்றின் பாராளுமன்ற அரசியல் அதற்கான பிரசாரம் என்பவற்றை மட்டுமே கருத்திற் கொண்டு செயற்பட்டு வந்துள்ளன. மலையக என்.ஜி.ஓக்களின் முயற்சியில் மலையகத்தமிழ் மக்கள் சார்பில் பொதுவான அரசியல் யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்று சில அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் என்பனவற்றின் சமுகத்துடன் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட யோசனைகள் யாதெனில் மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளை கொண்டு எவ்வாறு அதிக எம்.பிக்களை தெரிவு செய்து கொள்வது என்பதும் அதற்கு ஏற்ற தேர்தல் முறை யாதென்பதுமே ஆகும். மலையகத்தமிழ் மக்களுக்கு தனிமாகாண சபையை கேட்ட ம.ம.மு. தலைவர் பெ. சந்திரசேகரன் அது பற்றி மௌனம் சாதிக்கிறார். மலையத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை விளங்கப்படுத்த வெளிநாட்டு துதுவராலயங்களுக்கு ஏறி இறங்கியதாக அறிக்கைகளை விட்டு வந்தார். அவரும் எவ்வாறு பாராளுமன்ற எம். பிக்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வது என்பது பற்றியே தற்போது கவலைப்படுகிறார்.

இ.தொ.கா. மலையகத் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பங்கீடு கூட அவசியமில்லை என்ற நிலைப் பாட்டுடனேயே இருந்து வருகிறது. ஆறுமுகம் தலைமையிலான இ.தொ.கா.வின் நிலைப்பாடும் அதுவே. அதிருப்தியாளர்களின் நிலைப்பாடும் அதுவே. ஆனால் ஆறுமுகம் தலைமையிலான இ.தொ.கா. நாடற்றவர் பிரச்சினையை தீர்ப்பதற்காக எழுச்சிக் கூட்டங்களை நடத்தத் தொடங்கியுள்ளது. அதாவது மலையத் தமிழ் மக்கள் அனைவருக்கும்இலங்கைப் பிரஜா உரிமை கிடைத்துவிட்டால் போதும் என்பது அதன் நிலைப்பாடாகிறது.

ம. ம. முன்னணி பாராளுமன்ற உறுப்பிணர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கூறுவதும் இ.தொ.கா. நாடற்றவர் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று கூறுவதும் எதிர்வரும் போதுத் தேர்தலில் அதிகளவான வாக்குகளை கொள்ளையடித்துக் கொள்வதற்கே ஆகும். ம.ம. மு. யின் பாராளுமன்ற மோகம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிப்பை விட வேறு எதனையும் மலையக மக்கள் சிந்திக்கக்கூடாது என்பதில் அக்கறையாக இருக்கிறது. இ.தொ.கா.வின் நாடற்றவர் பிரச்சினைக்கு தீர்வு என்று பம்மாத்து மலையத் தமிழ் மக்களை பிச்சை வாங்கிப் பிழைப்பவர்களாகத் தொடர்ந்தும் வைத்திருக்கலாம் என்ற நம்பிக்கையில் செயல்படுகிறது.

நாடற்றவர்களின் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணப்பட வேண்டும் என்பது மலையகத் தமிழ் மக்களின் ஜீவாதார பிரச்சினைகளில் ஒன்றாகும். அவர்களில் பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் வர்க்கரீதியில் மிகவும் மோசமாக அடக்கப்படுகிறார்கள். அவர்களையும் உள்ளடக்கிய மலையகத் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு தேசிய இன ஒடுக்குமுறைக்குள்ளாகி யுள்ளனர். அவர்களின் அரசியல் பொருளாதார, மொழி, பண்பாட்டு உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட்டால் என்ன ? இலங்கைக்கென புதிய அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்பட்டாலென்ன ? மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காண்பதாக இருக்க வேண்டும்.

இதைத்தான் மலையகத் தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமையாக நம்புகின்றனர். அதை விடுத்து சிலர் கொழுத்து வாழ வழிவகுக்கும் அரசியல் சபைகளின் பிரதிநிதித்துவத்தால் அவர்களுக்கு எவ்வித பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. தொடர்ந்தும் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழவே விடப்படுவர்.

❖❖❖

## நாட்டின்

1 பக்கத் தொடர்

இலங்கையை தனது கைப்பிடிக்குள் கொண்டு வரக் கூடிய அபாயம் நாளாந்தம் அதிகரித்த வண்ணமே இருக்கிறது. இந்தியாவின் தேவைக்கும் நலன்களுக்கும் சேவை செய்யக் கூடிய சக்திகளை தமிழர் தரப்பில் மட்டுமன்றி சிங்கள மக்களிடையே உள்ள பேரினவாதிகள் மத்தியிலும் இந்தியா ஏற்கனவே உருவாக்கியுள்ளது. ஒரு பரந்த சதிவலையை இந்தியா இலங்கையைப் பொறுத்தவரை பின்னிவைத்து அதில் ஒவ்வொருவராக வீழ்த்தி வருகிறது. இவை முன்னைய பட்டறிவின் மூலமாக இந்தியா வகுத்துள்ள புதிய தந்திரோபாயமாகும். இது பிராந்திய மேலாதிக்கத்தின் நீண்டகால நோக்குக் கொண்ட மூலோபாயத்திற்கான ஒன்றாகும்.

அதேவேளை அமெரிக்கா தனது உலக மேலாதிக்க நோக்கிற்கு ஏற்றவாறு காய்களை நகர்த்தி தனது ஆதிக்கக் கால்களை எந்தெந்த முனைகளில் பதிக்கலாம் என மிகக் கவனத்துடன் செயலாற்றி வருகின்றது.

ஆதலால் நமது நாட்டின் எதிர்காலம் எவருடைய கைகளில் சென்றடையப் போகின்றது என்பது நாட்டின் இறமை சுதந்திரம் சுயாதிபத்தியம் பற்றி நேர்மையுடனும் நாட்டுப் பற்றுடனும் சிந்திக்கும் சக்திகளுக்கும் மக்களுக்கும் பலத்த அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. இவ் அபாயத்திற்கு எதிராக அனைத்து மக்கள் மத்தியில் குறிப்பாகச் சிங்கள மக்கள் மத்தியில் விழிப்பும் செயல்பாடும் தேவைப்படுகின்றது. தேசிய இனப் பிரச்சினைக்கு வெறும் பம்மாத்துக் காட்டும் வழிகளில் அன்றி நேர்மையான தீர்வுக்கு சிங்கள மக்கள் வற்புறுத்தத் தவறினால் நாடு அந்நியர் கைகளில் சிக்கி நாசமடைவதைத் தடுக்க வேறு வழியே கிடையாது.

♦♦♦

## வவுனியா ஆடைத்

9 பக்கத் தொடர்

வழங்கும் ஒரே தாபனமாக இருப்பதால் பெண்கள் இத்தொழிற்சாலைக்கு வருகிறார்கள். பிரயாணச் செலவாக நாளாந்தம் 30/= க்கு மேல் செலவாகிறது. மாதாந்தம் சுமார் 650/= பிரயாணச் செலவு போக மிகுதி எவ்வளவு தேறும்.

எமது சம்பளங்கள் எப்போது உயரும் என்ற எதிர்பார்ப்புடனே காலத்தைக் கழிக்கிறோம். எங்கள் நிலையையும் தங்கள் பத்திரிகை வாயிலாக ஏனையோருக்கும் தெரியப்படுத்துமாறு வேண்டுகிறேன். உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

இங்ஙனம்
*ஊழியர் தொழிலாளர்*
*நலன்விரும்பி*

## மலையகப்

1 பக்கத் தொடர்

மாதம் அடுத்த மாதம் நியமனம் வரும் வரும் என எதிர்பார்த்து ஏமாந்த நிலையில் விரக்தியுற்றவர்களாக இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தகுதி பெற்றவர்களுக்கு நியமனம் வழங்காத அரசின் நிலை பற்றித் தட்டிக் கேட்க மலையகத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர்களுக்கு முடியவில்லை. அரசாங்கப் பக்கத்தில் இருந்து கொண்டு அவசரகாலச் சட்டத்திற்கும் கொம்பனிகளுக்கும் பண முதலைகளுக்கும் பக்கபலமாக நின்று சேவை புரியும் இவர்களுக்கு மலையக மக்களின் துன்பம் எவ்வாறு புரியப் போகிறது.

ஆதலால் நியமனம் கிடைக்க ஒரே வழி வீதியில் இறங்கிப் போராட வேண்டியதுதான். வடக்கு கிழக்கில் பட்டதாரிகள் தொண்டர் ஆசிரியர்கள் வீதியில் இறங்கிய மறியல், உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் போன்ற நடவடிக்கைகளுக்குப் பின்பே அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் காதுகள் கேட்கவும், கண்கள் பார்க்கவும் முடிந்தது. எனவே மலையகத்தில் தகுதி பெற்ற இளைஞர் யுவதிகள் தம்மை ஒரு அமைப்பாக்கி வீதியில் இறங்குவதே சரியானதாகும்.

# விக்கிரமபாகுவின் உச்சம் சிகப்பு சந்தர்ப்பவாதம்

நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்னாவை அறிந்திருப்பீர்கள். அவரது முழுமையான அதிதீவிர சிகப்பு சந்தர்ப்பவாதத்தின் உச்சம் இப்போது வெளி வந்து கொண்டிருக்கிறது. மாநகர சபைக்கு சென்று பின்பு மாகாணசபைக்குள் பிரவேசித்து அதன்பின் பாராளுமன்றத்திள்குள் எப்படியும் நுளைந்து கொள்ள வேண்டும் என்பதே அவரது சோஷலிச இலட்சியம். இந்தப் பாதையில் தனது கட்சிக்குள் தில்லுமுல்லும் காய் வெட்ட வேண்டியவர்களை வெட்டியும் மாநகரசபைக்குள் புகுந்து கொண்டார். பின்பு கொள்கை ரீதியில் உருவாகிய புதிய இடதுசாரி (6 அமைப்புகள் இணைந்து) முன்னணியைப் பயன்படுத்தி மாகாண சபைக்குள் சென்ற உடனேயே யூ. என். பியுடன் இணைந்து சபாநாயகர் ஆக முயன்றார். அந்த இரகசியம் வெளியே வர புதிய இடதுசாரி முன்னணியை உடைத்து பெயரை மட்டும் தனதாக்கிக் கொண்டதுடன் ஜே.வி.பிக்குப் பின்னால் திரிந்த நரி போன்று திரிந்து ஜே.வி.பியின் இனவாதத்தை மூடிக்கட்டி சிகப்பு நற்சாட்சிப் பத்திரம் வழங்கி வந்தார். அதுவும் காரணத்தோடுதான். பொதுத் தேர்தலில் ஜே.வி.பியுடன் சேர்ந்து நின்றால் பாராளுமன்றம் செல்லலாம் என்ற நரிப்புத்திதான். ஆனால் ஜே.வி.பி. விக்கிரமபாகுவை வைக்க வேண்டிய இடத்தில் தள்ளி வைத்துக் கொண்டது. பாவம் இப்போது புதுச் சினேகிதம் பிடிக்க பழைய தோழர்களை நாடி நிற்கிறார். ஏன் வாசு இன்னும் நஞ்சு குடிக்கவில்லை என்று கேட்டு தனிப்படத் திட்டித்தீர்த்து தன்னைப் புரட்சிவாதியாகக் காட்டி நின்ற விக்கிரமபாகு இப்போது வாசுவின் பின்னால் சுற்ற ஆரம்பித்துள்ளார். தான் புதிய இடதுசாரி முன்னணி என்ற பெயர் பலகையில் கொழும்பில் தேர்தலில் நிற்க வாசுதேவநானாயக்காரவின் இடதுசாரி ஜனநாயக முன்னணி கொழும்பில் போட்டியிடாது விடவேண்டும் என்பதே விக்கிரமபாகுவின் விண்ணப்பமாகும். அது மட்டுமன்றி கொழும்பு வாழ் தமிழ் மக்களின் வாக்குகளைத் தட்டிப் பறிக்க இப்போது தமிழர் பிரச்சினை பற்றி நீட்டி வாசிக்கவும் ஆரம்பித்து விட்டார். அதே வேளை ஜே. வி. பியைத் திட்டவும் செய்கிறார். அவருக்கு பக்கவாத்தியம் வாசிக்க திருநாவுக்கரசு, ஜனகன் ஆகியோர் அடிக்கடி அறிக்கைகள் விட்டும் வருகின்றனர். என்ன குத்துக் கரணம் அடித்தாவது பாராளுமன்றத்திற்குள் சென்று விட்டால் அதுவே சொர்க்க விமோசனம் என்பதே விக்கிரமபாகுவின் சிகப்பு சந்தர்ப்பவாத நிலைப்பாடாகும். இதனை சிங்கள மக்கள் நன்கு அறிவர். தமிழ் மக்கள் இந்த சிகப்பு வேடதாரியை அடையாளம் கண்டு கொண்டால் போதுமானதாகும்.

# யூத இன ஒழிப்பு : இலங்கைக்கான பாடங்கள்

ரவுல் ஹில்பேர்க் எனும் சிறந்த வரலாற்றாய்வாளர் யூதர்கட்கு எதிரான இன ஒழிப்பின் நீண்ட கால வரலாற்றை மூன்று பகுதிகளாக வகுத்துள்ளார்.

1. கிறிஸ்து மதத்திற்கு மாற்றும் முயற்சி தோல்வி கண்ட பின்பு, யூதர்களை 'கெற்றோக்கள்' எனும் நகர்ப்புறச் சேரிகளில் வாழுமாறு ஒதுக்கியது.
2. முதலாளிய ஐரோப்பாவில் மத அடிப்படையிலான அரசியல் ஆதிக்கம் விலகிய பின்பு, கெற்றோக்களிலிருந்து வெளிவந்த யூதர்கள் ஒரு பொருளாதார மிரட்டலாகக் காணப்பட்டனர்.
3. யூதர்கள் இன அடிப்படையில் கீழானவர்கள் என்ற 'விஞ்ஞான ரீதியான' ஆரிய மேம்பாட்டுக் கொள்கையின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட இன ஒழிப்பு முயற்சி.

'சிங்ஹல உருமய' தலைவர் மலையகத் தமிழர் களைச் சிங்களவர்களாக மாற்றாததே டீ.எஸ் சேனநாயக்காவின் பெரிய தவறு என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

இன அடையாள மறுப்பு ஃபாசிசத்தின் அடிப்படையான கொள்கைகளில் ஒன்று.

சிங்ஹல உருமய, வீர விதான போன்றவை வெளிவெளியாக இனவாதம் பேசி இன ஒடுக்கலையும் இன ஒழிப்பையும் ஆதரிக்கின்றன.

பேரினவாத யூ.என்.பியும் பொதுசன முன்னணியும் சந்தர்ப்பவாதமாக இனவாத அரசியலை நடைமுறைப் படுத்துகின்றன.

ஜே.வி.பி. ? தமிழ் மக்களுக்கான சுயாட்சியை மறுப்பதில் ஜே.வி.பி. தலைமைக்குள்ள உற்சாகம் யூ.என்.பிக்கோ பொதுசன முன்னணிக்கோகூட இல்லை.

ஜே.வி.பியின் சிங்கள பௌத்த இனவாத அரசியல் அதை எங்கே கொண்டுபோய் விடும் என்பது பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஜே.வி.பியின் பேரினவாதத்தை மழுப்புகிறவர்கள் பற்றி அதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

# இடைக்கால ஆட்சிகள் : ஒரு வரலாற்றுக் குறிப்பு

ஒரு ஆட்சி முறையிலிருந்து இன்னொரு ஆட்சி முறைக்கு மாறுவதனால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கவும் முடியுமானால் தாங்கள் விரும்பாத ஆட்சி ஒன்றை வராமல் தடுக்கவுமே இடைக்கால ஆட்சிகள் அதிகார வர்க்கத்தால் நிறுவப் படுகின்றன.

ஸிம்பாப்வேயில் (முன்பு றொடீஷியா) ஸானு இயக்கம் அதிகாரத்தைப் பிடிக்காமல் தடுக்க நடபாங்கி ஸிதோலே என்பவரை பிரிட்டிஷ் கொலனிய நிருவாகம் இடைக்கால அரசாங்கமாக நிறுவ உதவியது.

ஈரானில் புரட்சிகர ஆட்சியைத் தடுப்பதற்காக, முதலில் பக்தியார் என்பவர் (முன்னர்) ஷாவால்) பதவியில் இருத்தப் பட்டார். இதற்கு அமெரிக்காவின் ஆசி இருந்தது.

வியற்னாமிலும் கம்போடியாவிலும் அமெரிக்காவால் நிறுவப்பட்ட பொம்மை ஆட்சிகளின் கீழ் அங்கு நடைபெற்றவை யாவை ? இருந்தும் அவை அங்கு நிலைக்க வில்லை என்பதும் நாம் அறிந்ததே. இது போல வரலாற்றில் நிறைய உண்டு.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் நிறுவப்படவுள்ளது என்று கூறப்படும் இடைக்கால (சபை) ஆட்சி பற்றி நாளைய வரலாறு என்ன சொல்லும் ?

வெளியிடுபவர் : இ. தம்பையா இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூ. கே. பிரிண்டஸ். 26/1இ சிவானந்தா வீதி, கொழும்பு 13.